பக்கங்கள்: 12 விலை : 20/-

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | பங்குனி 05 புதன்கிழமை 18.03.2020 | கதிர் 01

## வேட்புமனுத் தாக்கல் முடிந்ததும்

# இரு வாரங்களுக்கு நாடு முடக்கப்படும்!

## மூர்க்கத்தனம் மிக்க நடவடிக்கை கொரோனாவை தடுக்க அவசியம்

### இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 18

கொரோனா எனப்படும் கொவிட் 19 வைரஸின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மூர்க்கத்தனமான நடவடிக்கைகள் வேண்டும் என்று இலங்கை உள்ளிட்ட தென்கிழக்கு ஆசியப் பிராந்திய நாடுகளிடம் வலியுறுத்தியுள்ளது உலக சுகாதார நிறுவனம்.

இந்தப் பிராந்தியத்தில் கொரோனாவின் பாதிப்புக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 500ஐ எட்டிவிட்ட நிலையில் நடவடிக்கைகளின் தீவிரம் இந்தப் பிராந்தியத்தில் போதாமையாக உள்ளதாக அது தெரிவித்துள்ளது.

"நிலைமை தீவிரமாக வெளிப் பட்டு வருகின்றது. மேலும் பலருக்குப் பரவுவதற்கு முன்னதாக அதனைக் கட்டுப்படுத்துவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்" என்று தெரிவித்தார் உலக சுகாதார நிறுவனத்தின் தென்கிழக்கு ஆசியப் பிராந்தியப் பணிப்பாளர் மருத்துவர் புனம் கேத்திர பால்சிங்.

பக்கம் 11 »

## இரும்புக் கைகொண்டு கொரோனாவை அடக்கத் தயாராகிறது கோட்டா அரசு

கொழும்பு, மார்ச்18

அறிவிக்கப்பட்டுள்ள பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நாளை பூர்த்தியானதும், முழு நாட்டையும் இரண்டு வாரங்களுக்கு ஸ்ம்பிக்கச் செய்யும் வகையில் முடக்கி (Lock Down) கொரோனா பரவலை இரும்புக் கரம் கொண்டு அடக்கும் மூர்க்கத்தனமான நடவடிக்கைக்கு கோட்டாபய அரசு தயாராகி வருகின்றது.

அரசாங்கத்தின் மிக உயர்பீடம் ஒன்று 'காலைக்கதிர்' நாளிதழுக்கு நேற்றிரவு இத் தகவலை வெளியிட்டது.

பக்கம் 11 »

## இன்று காலை வேட்புமனுத் தாக்கல்...







படங்கள் : யாழ். தீபன்

## முக்கிய கட்சிகள் இன்று காலை யாழில் வேட்பு மனுத்தாக்கல்

யாழ்ப்பாணம், மார்ச்.18

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் முக்கிய தமிழ்க் கட்சிகள் இன்று காலை யாழ் மாவட்டச் செயலகத்தில் தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ,ஐ. தே.கட்சி, சு.க. ஆகியன இன்று காலை முழு உற்சாகத்துடன் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன.

பக்கம் 11 »

## திலீபனை அஞ்சலித்து முன்னணி வேட்புமனு

யாழ்ப்பாணம், மார்ச் 18

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் இன்று காலை யாழ். மாவட்ட செயலகத்தில் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

நல்லூரில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திவிட்டு அவர்கள் யாழ் மாவட்ட செயலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

யாழ் மாவட்டத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன்,

பக்கம் 11 »

## விக்கி அணியின் யாழ் வேட்பாளர்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 18

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி சார்பில் யாழ் மாவட்டத்தில் களமிறங்குபவர்கள் விவரம் வெளியாகியுள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் க.வி.விக்னேஸ்வரன், கந்தையா அருந்தவபாலன், தவச்செல்வன் சிற்பரன், கந்தையா இரத்தினகுமார், மீரா அருளானந்தம் ஆகியோரும் –

பக்கம் 11 »

# குடிவரவுத் திணைக்களம் ஜனாதிபதி கோட்டா வசம்

## அண்ணனிடம் இருந்து பறித்தார் தம்பி



கொழும்பு, மார்ச் 18

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம், விசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் ஜனாதிபதியின் கீழுள்ள பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஜனாதிபதியினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானி மூலம் இதற்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் கீழ் இருந்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் கீழ் செயற்பட்ட குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நேற்று வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலுக் கமைய அந்தத் திணைக்களம் பாதுகாப்பு அமைச் சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதற்கமைய குடிவரவு – குடியகல்வு நடவடிக்கை மற்றும் இலங்கை குடிமகன்களுக்கான நடவ டிக்கை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப் பட்டுள்ளதாக விசேட வர்த்தமானியில் குறிப்பிடப் பட்டுள்ளது. (ஐ)

# கோட்டாவின் உரை தேர்தல் பிரசாரமே!

### ஜே.வி.பியினர் குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 18

நெருக்கடியான சூழ்நிலையில் ஜனாதிபதியின் பேச்சு மோசமாக இருந்தது என்று ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நேற்று இரவு 8.30 மணிக்கு ஆற்றிய உரையை தொடர்ந்து டுவிட் டரில் பதிவு ஒன்றின் மூலம் பிமல் ரத்நாயக்க கடுமை யாகச் சாடியுள்ளார்.

'சுகாதாரம், போக்குவரத்து, பாதுகாப்பு ஊழி யர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைப்பதற்குப் பாராட்டுகள் இல்லை. குடிமக்கள் மற்றும் நிறுவனங் களுக்குத் தெளிவான வழிகாட்டுதல்கள் இல்லை. தேர்தல் பிரசாரம் மட்டுமே'– என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# வவுனியா கொரோனா மையத்தில் 448 விமான பயணிகள் தங்கவைப்பு



வவுனியா, மார்ச் 18

கொரனா தொற்று மருத்துவப் பரிசோதனைக்காக மேலும் 100 விமானப் பயணிகள் நேற்று வவுனியாவுக்கு அழைத்து வரப் பட்டனர். மூன்று கட்டங்களாக கொண்டு வரப்பட்ட 448 பேர் வவு னியா, பம்பைமடு பரிசோதனை நிலையத்தில் தங்க வைக்கப்பட் டுள்ளனர்.

கொரோனா தொற்று மருத்து வப் பரிசோதனைக்காக விமான பயணிகள் 213 பேர் கடந்த 13 ஆம் திகதி மாலை வவுனியாவுக்கு அழைத்து வரப்பட்டு பம்பைமடு பெண்கள் இராணுவ முகாமில் தங்க வைக்கப்பட்டனர்.

இரண்டாம் கட்டமாக கடந்த திங்கள்கிழமை அழைத்து வரப் பட்ட விமானப் பயணிகள் பம்மை மடு பகுதியில் அமைந்துள்ள 23 ஆவது பற்றாலியன் இராணுவ முகாமிலும் தங்க வைக்கப்பட்டுள் ளனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை 7.50 மணியளவில் பொலிஸ் மற் றும் இராணுவத்தினரின் பாதுகாப் புடன் 2 பஸ்களில் 100 விமான பயணிகள் அழைத்து வரப்பட்டு வவுனியா பம்மைமடு பகுதியில் அமைந்துள்ள 23ஆவது பற் றாலியன் இராணுவ முகாமில் அமைக்கப்பட்டுள்ள பரிசோதனை நிலையத்தில் தங்க வைக்கப்பட் டுள்ளனர்.

இதன்படி தற்போது 448 விமான பயணிகள் தங்க வைக் கப்பட்டு 14 நாட்களுக்கு பரிசோ தனை நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன. (ஐ -100)

### கொரோனா நோயாளிகள்:

# ஆபத்து கட்டத்தில் எவருமே இல்லை!

கொழும்பு, மார்ச் 18

கொரோனா தொற்றுக்குள்ளான எந்தவொரு நோயாளியும் கவலைக்கிடமாக இல்லை என தெரிவிக்கப்படுகின்றது.

பொதுச் சுகாதாரப் பிரிவு தொடர்பான பிரதிப் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் பபா பலிஹவடன இந்த விடயத்தைத் தெரி வித்தார்.

கொரோனா தொற்றுக்குள்ளான 43 பேர், விசேட வைத்தியக் குழுவின் கண்காணிப்பின் கீழ் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன், கொரோனா தொற்றுக்குள் ளானதாக சந்தேகிக்கப்படும் சுமார் 220 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின் றனர்.

அத்துடன், தனிமைப்படுத்திக் கண்காணிக் கும் நிலையங்கள் 16 ஆக அதிகரிக்கப்பட்டுள் ளன.

இந்தக் கண்காணிப்பு நிலையங்களில் 2 ஆயிரத்து 258 பேர் கண்காணிக்கப்பட்டு வரு கின்றனர்.

நாட்டை வந்தடைந்த ஆயிரத்து 500 முதல் இரண்டாயிரம் பேர் வரை இதுவரை தனிமைப் படுத்திக் கண்காணிக்கப்படாதுள்ளனர் என இராணுவம் சுட்டிக்காட்டியுள்ளது.

அவர்களின் வசிப்பிடங்களை அடையா ளங்காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அது குறித்து ஏனையோர் அறிந்துகொள் வதற்காக பொலிஸார் ஊடாக அறிவித்த லொன்றை வெளியிடத் தீர்மானித்துள்ளதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அத்துடன் வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்கு வருகை தந்து தனிமைப்படுத்தலுக்கு உட் படுத்தப்படாதுள்ளவர்கள் குறித்து அவதா னத்துடன் செயற்படுமாறும் அவர் கோரியுள் ளார். (ஐ)

# கொரோனாத் தாக்கத்திலிருந்து விடுபட திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மகாயாகம்

### பக்தர்களை வீடுகளில் இருந்து பிரார்த்திக்கக் கோரிக்கை

மன்னார்,மார்ச்18

உலகத்தையே ஆட்டிப்படைக்கும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து உலக மக்கள் நலம்பெற வேண்டி மன் னார் தேவாரப் பாடல் பெற்ற தலமான திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மகாயாகம் நடத்துவதற்கான ஏற்பாடுகளை ஆலய திருப்பணிச்சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

உலக மக்கள் இன்றைய வேகமாக பரவிவரும் கொரோனா வைரஸின் தாக் கத்தை முடிவுறுத்தி உலக மக்கள் நலம் பெற பிரார்த்திக்கும் வண்ணம் உலக நாயகனாக –வைத்தியநாதனாக – கௌரிஅம்பிகையுடன் வீற்றிருக்கின்ற திருக்கேதீச்சரநாதருக்கு திருக்கோயில் சனிப்பிரதோச நாளான 21 ஆம் திகதி சனியன்று காலை 9.30 மணி தொடக் கம் 12 மணி வரை மகாயாகம் நடை பெறுவதற்கான ஏற்பாடுகளை ஆலய திருப்பணிச்சபையினர் மேற்கொண் டுள்ளனர்.

அத்தருணம் உலக மக்கள் நலன் பெற வேண்டி தங்கள் இல்லங்களில் இருந்தேஇறைவனை பிராத்திக்கும்படி ஆலய நிர்வாகம் பக்தர்களை வேண்டி யுள்ளது.





# இரண்டு ஆசனங்கள் வன்னியில் கிடைக்கும்

## மஸ்தான் நம்பிக்கை



வன்னி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த இரு ஆசனங்களைப் பெறுவோம் என பொதுஜன பெரமுனவின் முதன்மை வேட்பாளரும் முன்னாள் பிரதிஅமைச்சருமான காதர்மஸ்தான் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் வேட்புமனுவை தாக்கல் செய்த பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமது கட்சி சார்பில் அரசியலில் அனுபவம் உள்ள வர்களையும், இளைஞர்களையும் உள்வாங்கி தேர்த லில் போட்டியிடுகின்றோம். தென்பகுதியில் அறுதிப் பெரும்பான்மை எடுக்கக் கூடிய நிலமை இருக்கின்றது. அதேபோல் இம்முறை வன்னி மாவட்டத்திலும் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெறக் கூடிய வியூகங்களை வகுத்துள்ளோம்.

எமது கட்சியில் அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் தூர நோக்கில் வன்னி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அவர்கள் எடுத்துள்ள நடவடிக்கையைச் செயற்படுத்த மக்கள் ஆணையைத் தருவார்கள். இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமது கட்சியில் வெற்றி பெறுவார்கள்.

கட்சியின் உயர்மட்ட முடிவுகளின் படியே செயற்படு கின்றோம். எமது தலைமையின் செயற்பாடுகளைப் பார்த்து பலர் தமக்கு இடம் வழங்குமாறு கோரினார்கள். கட்சி இணங்கண்டு வேட்பாளர்களை தெரிவு செய் துள்ளது – என்றார். (ஐ - 100)

# மஸ்தான் - தர்மபால இடையே மோதல்!

வன்னித் தேர்தல் தொகுதிக்கான பொதுஜன பெரமுனவின் வேட்புமனுவை வவுனியா மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்தபோது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், வேட்பாளருமான மஸ்தானுக்கும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் வேட்பாளருமான தர்மபால செனவிரட்னவுக்கும் இடையில் கடும் கருத்து மோதல் ஏற்பட்டது.

வேட்மனுவை தாக்கல் செய்வதற்காக வேட்பாளர் களான காதர் மஸ்தான், தர்மபால செனவிரட்ன, ரட்ணப்பிரிய பந்து மற்றும் ஆதரவாளர்கள் மாவட்ட செயலக வாயிலுக்கு வருகை தந்தனர். இதன்போது மூவர் மாத்திரமே உள்ளே செல்ல அனுமதிக்கப் படுவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது முதன்மை வேட்பாளரான மஸ் தான், வேட்பாளர் ரட்ணப்பிரிய பந்து மற்றும் சட்டத் தரணி ஒருவருடன் மாவட்ட செயலகத்துக்குள் சென்று வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்.

தன்னைத் திட்டமிட்டே அவர்கள் வெளியில் விட்டன என தெரிவித்த வேட்பாளர் தர்மபால, ஊட கங்களுக்கும் கருத்து தெரிவித்தார். இதன்போது –

தேர்தலில் போட்டியிடுவதற்காக நாங்கள் நிய மித்த உறுப்பினர்களை நீக்கிவிட்டு தனக்கு தேவை யானவர்களை மஸ்தான் நியமித்துள்ளார். முதல் எலியாபாய், பிறேம் போன்றவர்களின் பெயர்கள் இருந்தன. சிறந்தவர்களின் பெயர்கள் முன்னர் இருந்தன. அவை எல்லாவற்றையும் நீக்கி விட்டு புதியவர்களை நியமித்துள்ளார். வேட்புமனுத் தாக் கல் செய்யும்போது கூட என்னை விட்டுவிட்டு வேறு நபருடன் உள்ளே சென்று வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளார் – என்றார்.

இது தொடர்பில் வேட்பாளர் மஸ்தானிடம் கேட்ட போது, வேட்பாளர் தெரிவு கட்சியினால் இடம்பெற்றது எனக் கூறியமையுடன், எந்தப் பிரச்சினையும் இல்லை எனவும் தெரிவித்தார். (ஐ - 100)

# பஸ் நிலையங்களில் கிருமி தொற்று நீக்கம்

திருகோணமலை மாவட்டத்தில் கொரோனாதொற்றைத் தடுக்கும் முகமாக திருகோணமலை மத்திய பஸ்நிலையத் தில் தனியார் மற்றும் அரச பேருந்துகள் அனைத்துக்கும் நேற்று தொற்று நீக்கும் மருந்துகள் தெளிக் கப்பட்டன.

இந்தச் செயற் பாட்டை திருகோண மலை கடற்படையி னர் மேற்கொண்ட னர். பஸ்கள் மட் டுமன்றி பஸ் தரிப்பி டம் முழுவதும் சுத் தம் செய்யப்பட்டு தொற்று நீக்கும் மருந்துகள் தெளிக் கப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்துக்கு அதி களவான வெளிநாட் டுச் சுற்றுலாப் பய ணிகள் வருகை தரு வகின்றனமையோடு அதிகளவான வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகள்திருகோண மலை பஸ் நிலை யத் தைப் பயன்படுத் துகின்றமை குறிப்பி டத்தக்கதாகும்.

# மேர்வின் சில்வா ரணில் அணியில்!



கொழும்பு, மார்ச் 18

இலங்கையில் சர்ச்சைக்குரிய அரசியல்வாதியாகக் கருதப்பட்ட மேர்வின்சில்வா எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி யின் யானை சின்னத்தின்கீழ் அநுராதபுரம் மாவட்டத்தில் போட்டி யிடவுள்ளார்.

சிறிகொத்தவில் நேற்று வேட் புமனுவில் அவர் கையொப்ப மிட்டார்.

அநுராதபுரத்தை ஆட்சிசெய்த துட்டகைமுனு மன்னனின் கொள் கைவழி நடக்கும் நான், அந்த மண்ணிலேயே தேர்தலில் போட் டியிட்டு வெற்றிபெறுவேன். என்று கூறினார்.

அத்துடன், சஜித் பிரேமதாஸ மீதும் கடும் விமர்சனங்களை முன்வைத்தார்.

மஹிந்த ஆட்சியில் அமைச் சரவை அந்தஸ்த்துள்ள அமைச் சராக பதவி வகித்த மேர்வின் சில்வா, அரச ஊழியர் ஒருவரை மரத்தில் கட்டிவைத்து தாக்கியது டன், ஊடக நிறுவனமொன்றுக் குள் அத்துமீறி நுழைந்து அடாவடி யில் ஈடுபட்டார்.

அதுமட்டுமல்ல ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரான நவநீதம் பிள்ளை அம்மையார், இலங்கை வந்திருந்தபோது அவ ருக்குத் திருமண அழைப்பைவிடுத்து பெரும் சர்ச்சையில் சிக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சர்ச்சைக்குரிய அரசி யல்வாதியாக அவர் மாறியதால் 2015 இல் நடைபெற்ற பொதுத்தேர் தலில் போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட வில்லை.

இதனால், ராஜபக்ஷக்களுடன் முறுகலை ஏற்படுத்திக்கொண்ட மேர்வின் சில்வா, ஐக்கிய தேசியக் கட்சிக்கு மறைமுகமாக ஆதரவு வழங்கிவந்தார். கடந்த ஜனாதிப தித் தேர்தலின்போது சஜித்துக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவித் தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் சிக்கியுள்ள இலங்கை யாத்திரியர்கள்!

## அழைத்துவர துரித நடவடிக்கை

இந்தியாவில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள இலங்கை யாத்திரிகர்களை இலங்கைக்கு மீண்டும் அழைத்து வர இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சி னால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 22 சுற்றுலாக் குழுக்களைச் சேர்ந்த ஆயிரத்து 200 யாத்திரிகர்களை மீண்டும் அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை, இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் இணைந்து மேற்கொள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

மேலும் இலங்கையின் துணைத் தூதரகங்கள், வட இந்தியாவிலுள்ள யாத்திரைத் தலங்களுடனும் சுற்றுப்பயணக் குழுக்களுடனும் தொடர்புபை மேற் கொண்டு வருவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தமது பயண ஏற்பாடுகளை விரைவுபடுத்து மாறு சுற்றுப்பயணக் குழுக்கள் கோரப்பட்டுள்ளன.

பெரும்பாலான யாத்திரிகர்கள் எதிர்வரும் நாள்களில் புதுடில்லி மற்றும் சென்னை வழியாக நாடு திரும்ப வுள்ளனர். (ஐ)


# வைத்தியரைத் தாக்கிய ஊழியர்களுக்கு மறியல்!

யாழ்ப்பாணம், மார்ச் 18

கொரோனா வைரஸ் தொடர்பாக விழிப்புணர்வில் ஈடுபட்ட ஊர்காவற் றுறை சுகாதார வைத்திய அதிகாரி பரா.நந்தகுமார் மற்றும் அவருடன் சென்ற யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் மீது தாக்குதல் நடத் திய ஐஸ்கிறீம் நிறுவனத்தின் இரு ஊழி யர்களையும் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல் நல்லூரில் உள்ள ஐஸ்கிறீம் விற்பனை நிலையத்திற்கு முன்பாக இந்தத் தாக்கு தல் சம்பவம் இடம்பெற்றது. ஐஸ்கி றீம் விற்பனை நிலையப் பணியாளர் களும் மேலும் சிலரும் இணைந்து இந் தத் தாக்குதலை நடத்தியிருந்தனர். (ஐ)

## கேலிச்சித்திரம்



# பேரிடர் அவலத்திலும் அரசியல் லாபமீட்டுதல்

'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்பார்கள்.

கொரோனா வைரஸ் தாக்குதல் கொடூரத்தை ஒட்டி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்றிரவு நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்த கருத்துக்களும் கூட இவ்வாறு அவரின் அரசியல் உள்நோக்கத்தை வெளிப்படுத்தும் வகையறா வாக அமைந்தமை கண்கூடு.

நாட்டை – ஏன் முழு உலக நாடுகளையுமே – ஒரு பேரிடர், பேராபத்தாக வந்து சூழ்ந்து நிற்கின்றது. இச்சமயத்தில் நாட்டு மக்களுக்கு உரையாற்றுகின்றார் ஜனாதிபதி.

இந்தப் பேரச்ச நிலைக்கு மத்தியில் நீதியான – நியாயமான – நேர்மையான – ஜனநாயகப் பண்பியல்புகளைக் கொண்ட – ஒரு பொதுத் தேர்தல் சாத்தியமேயற்றது என்பது வெளிப்படையானது.

இந்தப் பேரிடரை ஒட்டித் தேர்தலை ஒத்தி வைக்கும் அறிவிப்பை உடன் வெளியிடுங்கள் என்று நாட்டின் முக்கிய கட்சிகள், தரப்புகள் எல்லாம் அறிவித்து விட்டன.

ஆனால் ஜனாதிபதியிடமிருந்தும், அவரது ஆளும் தரப்புக் கட்சியிடமும் இருந்தும்தான் அந்த அறிவிப்பு இன்னும் வரவேயில்லை.

மாறாக, இந்தப் பேரிடர் கொடூரத்துக்கு மத்தியிலும் தமக்குச் சாதகமாக அமைந்துள்ளதாகத் தான் கருதிக் கொள்ளும் அரசியல் சூழ்நிலையை குறுகிய அரசியல் நோக்கத்துக்குப் பயன்படுத்துவதிலேயே ஜனாதிபதியும் அவரது தரப்பினரும் முனைப்பாக இருக்கின்றனர் என்பது விசனத்துக்குரிய உண்மையாகும்.

## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

இந்தப் பேரிடர் அவலத்தை எதிர்கொள்வதற்கான கூட்டு வழிவகைகளை ஆராய்வதற்கு 'சார்க்' நாடுகளின் தலைவர்கள் காணொலி ஊடாக ஒன்று கூடி ஆராய்ந்த சமயத்திலும், திட்டமிட்டபடி தேர்தலை நடத்தியே தீருவேன் என்று சூளுரைப்பது போன்ற மமதைப் பேச்சையே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரதிபலித்தார்.

நேற்றும் கூட நாட்டு மக்களுக்குத் தாம் ஆற்றிய உரையில் தேர்தலை ஒத்திவைத்து, பேரிடர் விவகாரங்களில் மட்டும் அவதானம் செலுத்துவோம் என்ற கருத்தை அவர் பிரதிபலிக்கவேயில்லை.

மாறாக, பேரிடர் அவலத்தை தீர்ப்பதற்கு உதவும் சாக்கில் கிட்டக் கூடிய பயன்களை, அரசியல் லாபமாகத் தேர்தலில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்ற கருத்திலேயே அவரது நிலைப்பாடு பிரதிபலிக்கப்பட்டிருக்கின்றது.

நாட்டில் முக்கியமாக அறிவிக்கப்பட்டிருக்கும் பொதுத் தேர்தல் தொடர்பில் தமது நிலைப்பாட்டை அந்த உரையில் வெளிப்படுத்தாமல் –

வங்கி மற்றும் நிதி நிறுவனங்களினால் வழங்கப்பட்டுள்ள கடன்களை மீளப் பெற்றுக் கொள்வதை ஆறு மாத காலத்திற்கு இடைநிறுத்தும் உத்தரவை விடுத்தல் போன்ற அறிவிப்புகளை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

பேரிடர் அவலத்தின் பெறுபேறுகளைத் தேர்தல் லாபமாக எப்படி மாற்றலாம் என்ற ஆளும் தரப்பின் குறுகிய மனப் பண்பியல்பைத்தான் இந்த நிலைப்பாடு அம்பலப்படுத்தி நிற்கின்றது.

# தமிழர்கள் மீள ஏமாற்றப்படுவதற்கு துணைபோன அரசியல் போலிகளை அடியோடு நிராகரிப்போம்!

## *அழைக்கின்றார் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன்*

நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலை ஒட்டி ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ். க.பிறேமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கை இது:–

எமது மக்கள் தீர்க்கமாகச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய தருணம் இது. யுத்தத்திற்குப் பின்னர், தமிழ் மக்கள் ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மிக வலுவான ஆதரவை வழங்கிய மையுடன், தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான ஆணைகளையும் வழங்கியிருந்தார்கள். குறிப்பாக யுத்தம் முடிந்தவுடன் 2010ஆம் ஆண்டு மற்றும் 2015ஆம் ஆண்டுகளில், அனைத்து எதிர்ப்புகளையும், அச்சுறுத்தல்களையும் மீறி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பிவைத்தனர். 2014ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில், மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிக்குமுன்பாக அவரிடமிருந்து சில உறுதிமொழிகளை நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று சம்பந்தனிடம் நாம் வேண்டியபோதும் கூட, மைத்திரிபால சிறிசேனவின் மீது தமக்கு முழுமையான நம்பிக்கை உள்ளது என்றும், அவர் இனவாதம் கொண்டவரல்லர் என்றும், அவரை நம்பமுடியும் என்றும் எங்களுக்குக் கூறினார்.

ஆனால் அண்மைக்கால இலங்கை அரசியல் வரலாற்றில் எல்லா அரச தலைவர்களும் எம்மை ஏமாற்றியிருக்கிறார்களே தவிர, தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு யாரும் முழுமையாக முன்வரவில்லை என்பதை நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினோம். அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்தது.

இன்று மாவை சேனாதிராஜா, சுமந்திரன் மற்றும் சம்பந்தன் போன்றோர் தாங்கள் மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க போன்றோரால் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்று கூறுகிறார்கள். இந்த தேர்தலுக்கான திகதி அறிவிக்கும்வரையில், தாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்பது இவர்களுக்குப் புரியவில்லை என்பது விந்தையாக இருக்கின்றது.

2015ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் ஆட்சி அமைத்ததும், நாடாளுமன்றத்தை ஓர் அரசியல் சாசன சபையாக மாற்றினார்கள். அதனூடாக புதிய அரசியல் சாசனம் ஒன்று விரைவில் நிறைவேற்றப்படும் என்று கூறப்பட்டது. 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் தைப்பொங்கல் மற்றும் தீபாவளிக்கு முன்பாக எமக்கு ஒரு தீர்வு கிட்டும் என்று சம்பந்தன் மீண்டும் மீண்டும் கூறிவந்தாலும் அவை எவையும் நடைபெறவில்லை. இதனைப் போலவே, 'புதிய அரசியல் சாசனம் வராவிட்டால் அதற்குப் பொறுப்பேற்று நான் அரசியலிலிருந்து விலகுவேன்' என்றும், 'அது நிறைவேறிவிட்டால் அதற்குப் பின்னர் அரசியலில் தமக்கு எந்த வேலையும் இல்லை' என்றும் சுமந்திரன் அறிவித்திருந்தார். மற்றொரு சந்தர்ப்பத்தில் தமது ராஜினாமாக் கடிதத்தின் அரைவாசியை எழுதிவிட்டார் எனவும் கூறினார். ஆனால் 2019ஆம் ஆண்டு முடிவுற்ற நிலையிலும்கூட, இவர்களால் புதிய அரசியல் சாசனத்தைக் கொண்டுவர முடியவில்லை.

இப்பொழுது வேண்டுமானால் 'முயற்சித்தோம், ஏமாற்றப்பட்டுவிட்டோம்' – என்று கூறலாம்.

வடக்கு – கிழக்கு இணைப்பு, மதச்சார்பற்ற நாடு, சமஷ்டி அரசமைப்பு முறை என்பவையே தமிழ் மக்களின் தீர்விற்கான அடிப்படை அரசியல் கோரிக்கைகளாக இருந்தன. ஆனால் இவை அனைத்தையும் கைவிட்டுவிட்டுப் பேசிய போதிலும்கூட இவர்களால் புதிய அரசியல் சாசனத்தைக் கொண்டுவரமுடியவில்லை.

இதனைப் போன்றே, ஜெனீவா மனித உரிமைகள் ஆணையகத்திலும், 2012ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இரண்டு வருட காலஅவகாசம் வழங்கப்பட்டது. இலங்கை அரசாங்கம் எத்தகைய நடவடிக்கையையும் மேற்கொள்ளாத காரணத்தினால் ஒரு சர்வதேச விசாரணையை வலியுறுத்தி அன்றைய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையட் ராட் அல் உசைன் 2015ஆம் ஆண்டு தமது பரிந்துரையை முன்வைத்தார்.

அதே நேரத்தில் சுமந்திரன் இலங்கை அரசாங்கத்துடன் ஓர் உடன்பாட்டிற்கு வந்து அல்ஹுசைனின் பரிந்துரையை நீர்த்துப் போகச் செய்து, கலப்புப் பொறிமுறை என்ற பெயரில் இலங்கை அரசாங்கத்தின் இணை அனுசரணையுடன் 30/1 தீர்மானத்தை நிறைவேற்றி, இலங்கையை சர்வதேச நெருக்கடியிலிருந்து காப்பாற்றினார். இந்த நீர்த்துப்போன தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு இலங்கைக்கு இரண்டுவருட கால அவகாசத்தையும் பெற்றுக்கொடுத்தார். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக தாம் ஜெனிவா, நியூயார்க் போன்ற நகரங்களுக்குப் பறந்து சென்று, அவர்களது ஆதரவைப் பெற்றார் எனவும் இதற்கான முழுப்பொறுப்பையும் தாமே ஏற்கிறார் எனவும் மார்தட்டிக்கொண்டார்.

அடுத்து வந்த இரண்டு வருடங்களிலும் எதுவுமே நடக்காமல் இருக்க, மீண்டும் மீண்டும் எமது எதிர்ப்புகளையும், தமிழ் மக்களின் எதிர்ப்புகளையும் மீறி, இலங்கை அரசாங்கத்தை ஜெனீவா நெருக்கடியிலிருந்து மீட்டு அவர்களுக்குக் கால அவகாசத்தையும் பெற்றுக்கொடுத்தார். அவர்கள் உருவாக்கிய நல்லாட்சி அரசாங்கம் எந்தவித அதிகாரமுமற்ற காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் ஒன்றைத் திறந்ததைத் தவிர வேறு எதனையும் செய்யவில்லை.

இப்பொழுது புதிய அரசாங்கம் பதவிக்கு வந்து, ஜெனீவாத் தீர்மானங்களைத் தாங்கள் முற்றுமுழுதாக நிராகரிக்கின்றனர் எனவும் தெரிவித்து அதிலிருந்து வெளியேறிவிட்டது. இந்தச் சாதனைகளை முன்வைத்துத்தான் தங்களுக்கு மீண்டும் ஒருமுறை வாய்ப்புத் தரும்படி தங்கள் சார்பாக இருபது நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும்படியும் மக்களிடம் கோரிக்கைகளை முன்வைக்கின்றனர்.

பங்காளிக்கட்சிகளுடனோ தமது நாடாளுமன்ற உறுப்பினர்களுடனோ எந்தவிதமான கலந்துரையாடல்களும் இல்லாமல், தான்தோன்றித்தனமான



முறையில் இவர்கள் எடுத்த முடிவானது எமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்கள் அனைத்தையும் வீண்விரயமாக்கின.

அரசியல் சாசனம் நிறைவேற்றப்படவில்லை. வடக்கு – கிழக்கு இணைக்கப்படவில்லை. அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோருக்கு எதுவித பதிலுமில்லை. ஜெனீவாத் தீர்மானங்கள் கையறு நிலைக்குச் சென்றுள்ளன. மொத்தத்தில் இவர்களது தான்தோன்றித் தனமான முடிவுகள் ஒட்டுமொத்த தமிழினத்தையும் மேலும் பின்னோக்கி நகர்த்தியுள்ளன. உண்மையாகவே இவை அனைத்திற்கும் பொறுப்பேற்று சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராஜா உட்பட ஒட்டுமொத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவியைத் துறந்திருக்க வேண்டும். ஆனால் எதுவுமே நடக்காதது போலவும், தாங்கள் மிகவும் நேர்மையாகச் செயற்பட்டவர்கள் போலவும், தாங்கள் ராஜதந்திரத்துடன் செயற்பட்டனர் எனவும் பாசாங்கு செய்து இன்னும் தமிழ் மக்களை ஏமாற்ற முற்படுவதுதான் வேதனைக்கும் கவலைக்குமுரியதாகும்.

தங்களை கல்விமான்களாகவும், கண்ணியவான்களாகவும், தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கே அவதரித்தவர்கள் போலவும்,இவர்களைப் பற்றிய ஒரு தவறான பிம்பத்தை இவர்களே உருவாக்கித் தாங்கள் இல்லாவிட்டால், எதுவுமே நடைபெறமாட்டாது என்றவிதமான ஒரு பிழையான கருத்தாக்கத்தையும் உருவாக்க முயற்சிக்கின்றார்கள்.

அது மட்டுமன்றி, அரசாங்கத்தைப் பாதுகாப்பதை அடிப்படையாகக் கொண்டே, இவர்களது அனைத்து செயற்பாடுகளும் இருந்தபோதும்கூட, தமிழ் மக்களுக்காகவே தாங்கள் அரசாங்கத்தைக் காப்பாற்றினோம் எனக் கபடநாடகம் ஆடுவதுடன், அதனை தமக்கு ஏற்றாற்போல் வியாக்கியானம் செய்யவும் முற்படுகின்றார்கள். இவ்வாறான பிழையான, ஏமாற்றுத்தனமான கருத்தாடல்களை முன்வைப்போரை எமது மக்கள் இனங்கண்டு நிராகரிக்க வேண்டும். இதுவே இன்றைய காலத்தின் தேவை.

# உக்கிய மரங்களுக்கு வானில் பூசுவதில் திமிரோடு திருப்தி கொள்ளும் தமிழர்கள்



தமிழர்களது விடுதலைப்போராட்டத்தை ஆயுதவழியில் முன்னெடுத்த விடுதலைப்புலிகள் தங்களின் அமைப்பில் பேணிய பல்வேறு விடயங்கள் இன்றுவரை நினைவுகொள்ளத்தக்கவை என்பதற்கு அப்பால் உதாரணமாக முன்கொள்ள தகுந்தவை. இந்த அம்சங்களையெல்லாம் படைத்துறையின் பாடப்புத்தகமாக பலர் ஆய்வுசெய்கிறார்கள். சிறிலங்கா இராணுவத்தரப்பினரே பல்வேறு இடங்களில் விதந்து பேசியிருக்கிறார்கள்.

அந்தவகையில், விடுதலைப்புலிகளின் படைக் கட்டமைப்பினை சற்று உள்வட்டமாக எடுத்து நோக்கினால், அந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து இறுதியில் முற்றாக இல்லாமல்போய்விட்ட காலப்பகுதி வரைக்கும் அதற்குள் மெல்லிய – சீரான – ஒழுங்குமுறையொன்று பேணப்பட்டதைக் காணலாம்.

அதாவது, ஒவ்வொரு காலகட்டத்திலும் போர் முனைகளுக்குச் சென்று போராடி வீரச்சாவடைந்தவர்கள் தவிர, ஏனையவர்கள் மூப்பின் அடிப்படையில் பின்னணியில் வந்து நின்று படைகளை வழிநடத்துவார்கள் அதன் அர்த்தம்,



அவர்கள் போருக்கு அஞ்சியவர்கள் என்றல்ல. தங்களின் அனுபவத்தினை புதிய போராளிகளுக்கு கொடுப்பது, களத்தின் நாடி நரம்புகளை அவர்களுக்கு சொல்லிக்கொடுப்பது என்பவையும்கூட சண்டையின் முக்கிய பணிகளாக முன்னெடுப்பது.

ஆக, இப்படிப்பட்ட மூத்த தலைவர்கள் மிகப் பொறுப்போடு அந்தப்பணியை முன்னெடுத்துக்கொண்டிருக்க, ஒவ்வொரு காலப்பகுதியிலும் புதியவர்கள் களத்திலே பிரகாசித்தார்கள். யுத்த முனையில் வெற்றிகளை குவித்தார்கள். அவர்களின் வெற்றியிலிருந்த துணிச்சலுக்கும் திறமைக்கும் அப்பால், பின்னணியில் நின்றுகொண்ட மூத்த தளபதிகள் வழிகாட்டுத்தலிருந்தது.

எண்பதுகளில் புலிகள் அமைப்பில் முன்னணி சண்டைக்காரர்களாக நின்றவர்கள் யார் என்பதையும், பிறகு பிறகு வந்த முக்கியமான தளபதிகள் யார் என்பதையும், சமாதான காலப் பகுதிக்குப் பிறகு களத்துக்கு வந்தவர்கள் யார்



என்பதையும், ஒரு சிறிய நினைவுமீட்டலை செய்து பார்த்தால், மேற்குறிப்பிட்டமை போன்ற ஒரு ஒழுங்கினைக் அங்கே காணலாம்.

இன்னும் குறிப்பாக – ஒவ்வொரு பத்து வருடங்களாக –விடுதலைப்புலிகள் அமைப்பினை வகுத்து – ஒரு குறுக்குவெட்டு முகமாக வைத்து பார்த்தால் – அந்தந்த காலப்பகுதியில் முன்னணி தளபதிகளாக நின்றவர்கள் யார், அவர்கள் புதிதாக தோன்றிய காலப்பகுதி போன்றவற்றிலும் ஓர் ஒழுங்கினைக்காணலாம். அவ்வாறு புதித்தாக வந்த பிரகாசித்த தளபதிகள், அமைப்பின் படைத்துறையில் பின்னர் என்ன பங்கு – பணி வகித்தார்கள் என்பதையும் புரிந்துகொள்ளலாம்.

இந்த ஒழுங்குமுறை விடுதலைப்புலிகள் அமைப்பில் மாத்திரமல்ல, உலகிலுள்ள எல்லா படைத்துறைக் கட்டமைப்புக்களிலும் கூடக் கடைப்பிடிக்கப்படுவது வழக்கம்.

அதற்குக் காரணம், மூப்பின் அடிப்படையில் குறிப்பிட்ட அனுபவஸ்தர்களுக்கு ஒரு அங்கீகாரத்தை வழங்குதல் மாத்திரமல்ல.

புதிதாக வருபவர்களின் புதிய திறமைகளை உள்வாங்கிக்கொள்வதற்கும் அந்த திறமைகளுக்கு ஆதாரமாக உள்ள புதிய சிந்தனைகளைத் தெரிந்துகொள்வதற்கும்தான் அது.

கால ஓட்டத்தில் புதிது புதிதாக வந்து இணைந்து கொள்பவர்கள்தான் ஒவ்வொரு காலகட்டத்தினையும் புதுப்பிக்கிறார்கள். இது எல்லா துறைக



ளுக்கும் பொருந்தும். புதிய சிந்தனைகொண்டவர்களால்தான் காலம் புதுப்பிக்கப்படுகிறது. அதுவே, எதிர்காலத்திடம் கைமாறப்படுகின்ற பெறுமதிமிக்க சொத்துமாகும்.

ஒற்றைப்படையான பாதையை மாத்திரம் கொண்ட இராணுவ இயந்திரத்தினை இயக்குவதற்கே இவ்வாறான புதுப்பித்தல்களும் மீள் ஒழுங்குகளும் தேவைப்படுகின்றபோது –


முற்றுமுழுதாகவே அறிவியல்தளத்தில் இயங்கவேண்டிய அரசியல்துறையை கையாளும்தரப்பு எவ்வளவுதூரம்தான் சார்ந்ததுறையை கூர்மையானதாக பேணவேண்டும்...?!

அரசியல்துறை சார்ந்தவர்கள் பட்டறிவுக்கு அப்பால், புதிய சிந்தனைகொண்டவர்களாக – பரந்த உலக அறிவு கொண்டவர்களாக – புத்தக வாசிப்பு நிறைந்தவர்களாக – வரலாற்றினை சமகாலத்தோடு ஒப்பீடு செய்து தீர்மானங்களை மேற்கொள்பவர்களாக – புதிய விடயங்களை மக்களிடம் கொண்டுசெல்லக்கூடியவர்களாக – அவற்றுக்கான தர்க்க நியாயங்களை மக்களுக்கு விளங்கச்சொல்லக்கூடியவர்களாக – இருக்கவேண்டும் என்பது அடிப்படை தகுதி.

இவையெல்லாம் ஒவ்வொருகாலகட்டத்திலும் புதுப்பிக்கப்பட்டபடியிருக்கவேண்டும்.

ஏனெனில், பத்தாண்டுகளுக்கு ஒரு தடவை உலகில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துவிடுகின்றன. அரசியலில் மாத்திரமல்லாமல், எல்லா விடயங்களிலும் நகர்வுகள் இடம்பெற்று, புதிய தலைமுறையொன்று உருவாகிவிடுகிறது. மாறாமல் ஒரே வட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் 'பழசுகளை' காட்சிப்பொருட்களாக வைத்திருக்க





கட்டுரையாளர் – தெய்வீகன்

> அழிக்க வருகின்ற ஆயுதங்கள் – வைரஸ் வரைக் கூட – எல்லாமே புதிதாக மாறிவிட்ட நிலையில், ஆக்கத்துக்கான வழிகளும் அதில் இடறுபவர்களும்தான் பழசுகளாகவே கிடக்கிறார்கள்.

லாமே தவிர, காரியத்துக்குப் பயன்படுத்தமுடியாது.

அப்படியிருக்கும்போது, அந்தத் தலைமுறையின் அரசியலை தீர்மானிப்பவர்களும், முன்னெடுப்பவர்களும் கூட சமாந்தரமாக – மாறிவருபவர்களாக – அல்லது மாற்றத்தை உள்வாங்க வல்லவர்களாக – இருக்கவேண்டும்.

இந்தப் பின்னணியில்தான் இன்றைய ஈழத் தமிழர் அரசியலை பார்க்கவேண்டியிருக்கிறது.

போர்முடிந்து பத்து வருடங்கள் நிறைவடைந்து பதினொராவது வருடத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது தமிழர் தரப்பின் அரசியல்.

இன்றுஈழத்தமிழர்களின் நாடாளுமன்ற அரசியலில் ஆழமாகக் கரைந்து கிடப்பவர்களைப் பார்த்தால், குறிப்பாக ஓரிருவரை தவிர, ஏனையவர்கள் தங்கள் கட்சிகளிடம் ஆயுள் சந்தா செலுத்திவிட்டு நாடாளுமன்றத்திற்கு சென்று வருபவர்களாகத்தான் தெரிகிறார்கள்.

மேற்குறிப்பிட்டதுபோன்ற சிந்தனை மாற்றங்களோ – தங்கள் அளவிலாவது ஆளுமை முன்னேற்றங்களோ – அறவே இல்லாதவர்கள் இவர்கள். இந்தப் பத்தியை ஒரு கையில் வைத்துக்கொண்டு, தற்போதுள்ள அரசி



யல்வாதிகளை வரிசையில் வைத்து பார்த்தாலே, அவர்களில் எத்தனைபேர் இந்த பட்டியலுக்குள் வரமாட்டார்கள் என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

இப்படிப்பட்டதொரு அதரப்பழசான அரசியல் வாகனம்தமிழர்தெருக்களில்எவ்வளவுகாலத்துக்கு ஓடிக்கொண்டிருக்கப்போகிறது? இதனை அனுமதிப்பதும் முடிவெடுக்கப்போவதும் யார்?

இந்தக்கேள்விகளை கேட்கவேண்டிய முக்கியமான காலப்பகுதியும் முக்கியமான தேர்தலும் இதுவாகும்.

இந்தக்கேள்வியானது, கடந்த பத்து வருடங்களில் இடம்பெற்ற தமிழர் அரசியல் தொடர்பான அளவீடுகளையும் வேண்டுமானால் உள்ளே சேர்த்துக்கொள்ளலாம்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிற்கு மாற்று சக்தியொன்று உருவாக்கப்படுவது ஆரோக்கியமானதுதான். ஒற்றைத்தலைமையாகவும் ஒரு கட்சி ஆட்சியாகவும் அதிகாரத்திலிருப்பதே தவறு. அது தொடர்வது அதைவிடப்பெரிய தவறு.

(09 பக்கம் பார்க்க...)



# நிர்பயா குற்றவாளிகள் வெள்ளியன்று தூக்கில்!

## இன்று ஒத்திகை பார்க்கப்படுகிறது



புதுடெல்லி,மார்ச்.18

நிர்பயா குற்றவாளிகளுக்கு நாளை மறுநாள் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுகிறது. தூக்கில் போடுவது குறித்த ஒத்திகை இன்று(புதன் கிழமை) மீரட்டைச் சேர்ந்த பவன் ஜல்லத் என்கிற பணியாளரால் பார்க்கப்படுகிறது.

டெல்லியில், ஓடும் பஸ்ஸில் துணை மருத்துவ மாணவி நிர்பயா பாலியல் பலாத்காரம் செய்து கொல்லப்பட்ட வழக்கில் குற்றவாளிகள் முகேஷ்குமார் சிங்(வயது32), அக்ஷய்குமார் சிங்(31), வினய் சர்மா(26) மற்றும் பவன்குப்தா(25) ஆகிய 4 பேருக்கும் தூக்குதண்டனை விதிக்கப்பட்டு உள்ளது.

நீதிமன்றம் பிறப்பித்த 4 ஆவது மரண உத்தரவின்படி 4 பேரும் நாளை மறுநாள் (வெள்ளிக்கிழமை) தூக்கிலிடப்பட வேண்டும். இதற்காக திகார் சிறை நிர்வாகம் முன் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

குற்றவாளிகளைத் தூக்கில் போடுவதற்காக உத்தரபிரதேச மாநிலம் மீரட்டைச் சேர்ந்த பவன் ஜல்லத் என்கிற பணியாளர் நியமிக்கப்பட்டு இருந்தார். இவர் நேற்று, டெல்லி திகார் சிறைக்கு வந்தார்.

இதனைத் தொடர்ந்து, இன்று(புதன்கிழமை) தூக்கில் போடுவது குறித்த ஒத்திகையை அவர் நடத்துகிறார். நாளை மறுநாள் அதிகாலை 5.30 மணிக்கு 4 பேருக்கும் தூக்குத்தண்டனை நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கொரோனாத் தொற்று இரத்த ஆய்வுக்கு தனியார் நிறுவனங்களுக்கும் அனுமதி



சென்னை,மார்ச்18

கொரோனா தொற்றுநோய் பாதிப்பு குறித்த பரிசோதனையை முன்னெடுப்பதற்கு அங்கீகாரம் பெற்ற தனியார் ஆய்வகங்களுக்கும் அனுமதி வழங்க இந்திய மத்திய அரசு முடிவு செய்திருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கொரோனா பாதிப்பு அறிகுறி உள்ளவர்களின் இரத்த மாதிரிகள் உள்ளிட்டவை மாநில அரசுகளின் ஆய்வகங்களில் முதலில் பரிசோதிக்கப்படும். அதில், கொரோனா பாதிப்பு உறுதியானால், புனே ஆய்வகத்திற்கு இரத்த மாதிரிகள் அனுப்பிவைக்கப்பட்டு இறுதிக்கட்ட பரிசோதனை அறிக்கை பெறப்பட்டு, அறிவிக்கப்படும்.

நாடு முழுவதும் கொரோனா பாதிப்பு அதிகரித்துள்ளதால், கொரோனா பரிசோதனையில் தனியார் ஆய்வகங்களையும் அனுமதிக்க மத்திய அரசு முடிவு செய்திருப்பதாக சொல்லப்படுகிறது.

இந்த வகையில், நாடு முழுவதும், 60 அங்கீகாரம் பெற்ற தனியார் ஆய்வகங்களுக்கு மத்திய சுகாதாரத் துறை விரைவில், ஒப்புதல் வழங்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# தேவையற்ற கருவை கலைப்பதற்கு அனுமதி அளிக்கும் சட்டத் திருத்தம்

மருத்துவரீதியாக பெண்கள் தேவையற்ற கருவைக் கலைப்பதற்கு அனுமதி அளிக்கும் திருத்தப்பட்ட கருக்கலைப்பு சட்மூலம் இந்திய மக்களவையில் நேற்று நிறைவேறியது.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில் 1971 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பு சட்டத்தை திருத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

அதன்படி கருக்கலைப்பு செய்வதற்கான கர்ப்பக்கால வரம்பை சில குறிப்பிட்ட பிரிவினருக்கு 20 வாரத்தில் இருந்து 24 வாரமாக உயர்த்துவதற்கு இந்த சட்டத்திருத்தம் அனுமதி வழங்குகிறது.

பாலியல் பலாத்கார சம்பவங்களில் உயிர் தப்பியவர்கள் மற்றும் பிற பாதிப்புகளுக்கு இலக்கான பெண்கள் இவர்களில் அடங்குவர்

# இந்தியாவில் பல கோவில்களும் முதல் தடவையாக மூடப்பட்டன

## ஆலய பிரார்த்தனைகள் ஒன்லைனில் ஒளிபரப்பு



மும்பை,மார்ச்18

கொரோனா வைரஸ் பரவலை தடுக்கும் வகையில் மகாராஷ்டிராவில் உலக புகழ்பெற்ற சீரடி சாய்பாபா கோவில் மற்றும் பிரசித்தி பெற்ற பல கோவில்களும் மூடப்பட்டன.

சீனாவில் இருந்து உலகம் முழுவதும் ஆள்கொல்லி கொரோனா வைரஸ் பரவி வருகிறது. குறிப்பாக மகாராஷ்டிராவில் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து கொண்டே வருகிறது.

எனவே கொரோனா பரவுவதை தடுக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக நேற்று முன்தினம் மாலை மும்பையில் உள்ள பிரசித்தி பெற்ற சித்தி விநாயகர் கோவில் மூடப்பட்டது. உஸ்மனாபாத்தில் உள்ள துலிஜா பவானி கோவிலும் மூடப்பட்டது.

இந்த நிலையில் உலக பிரசித்தி பெற்ற சீரடி சாய்பாபா கோவில் நேற்று மாலை 3 மணி அளவில் மூடப்பட்டது. இங்கு தினமும் உள்நாட்டை சேர்ந்தவர்கள் மட்டுமின்றி ஏராளமான வெளிநாட்டு பக்தர்களும் வந்து சாமி தரிசனம் செய்வது வழக்கம்.

இதுகுறித்து சீரடி சாய்பாபா கோவில் செய்தி தொடர்பாளர் சுனில் தாம்பே கூறுகையில் –

“வரலாற்றில் முதல் முறையாக சீரடி சாய்பாபா கோவிலை மூடி உள்ளோம். கொரோனா வைரஸ் பரவல் குறையும் வரை கோவில் மூடப்பட்டு இருக்கும்” என்றார்.

மேலும் மகாராஷ்டிராவில் உள்ள பிரசித்தி பெற்ற சிங்கனாப்பூர் சனி பகவான் கோவிலும் மூடப்பட்டது.

இதேபோல மும்பை வால்கேஷ்வரில் உள்ள பபுல்நாத் கோவில், ஜாவேரி பஜார் அருகே உள்ள மும்பா தேவி கோவில், மகாலெட்சுமியில் உள்ள மகா லெட்சுமி கோவிலும் வருகிற 31 ஆம் திகதி வரை மூடப்பட்டு இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மும்பை மாகிமில் உள்ள புனித மிக்கேல் தேவாலயத்திலும் இன்று (புதன் கிழமை) நடக்கும் ஆராதனையில் பொது மக்கள் கலந்து கொள்ளத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆலய பிரார்த்தனைகள் ஒன்லைனில் ஒளிபரப்பப்பட உள்ளன.

# இந்தியா முழுவதிலும் 15 அம்ச கட்டுப்பாடுகள்



புதுடெல்லி,மார்ச்18

கொரோனா தாக்கத்தை கட்டுப்படுத்த நாடு முழுவதும் 15 அம்ச கட்டுப்பாடுகளை இந்திய மத்திய அரசு விதித்துள்ளது.

மத்திய அரசு அறிவித்துள்ள 15 அம்ச கட்டுப்பாடுகள் பின்வருமாறு: –

* நாடு முழுவதும் பல்கலைக்கழகங்கள் உள்பட அனைத்து கல்வி நிறுவனங்களும் மூடப்படுகின்றன. உடற்பயிற்சி கூடங்கள், நீச்சல் குளங்களும் மூடப்படும். மாணவர்கள் வெளியே எங்கும் செல்லாமல் வீடுகளிலேயே தங்கி இருக்க வேண்டும்.

* கல்வி நிறுவனங்கள் தேர்வுகளை ஒத்திவைக்க வேண்டும். தேவைப்படும்பட்சத்தில் ஒன்லைன் மூலம் தேர்வு நடத்தலாம்.

* தனியார் நிறுவன ஊழியர்கள் வீடுகளில் இருந்து பணியாற்ற வேண்டும்.

* பெரிய நிறுவனங்கள் ஆலோசனை கூட்டங்களை காணொலிக் காட்சி மூலம் நடத்தலாம்.

* திருமண மண்டபங்களில் ஏற்கனவே திட்டமிட்ட நிகழ்ச்சிகளை மட்டுமே நடத்த வேண்டும். புதிய நிகழ்ச்சிகளை நடத்த அனுமதி வழங்கக்கூடாது.

* ஹோட்டல்கள், விடுதிகளில் சுகாதார நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டும். அங்கு கைகழுவுவதற்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்த வேண்டும். உள்ளூர் விளையாட்டு போட்டிகள் அனைத்தையும் ஒத்திவைக்க வேண்டும்.

* பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் ஆன்மிக நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யக் கூடாது. மக்கள் தேவையின்றி பஸ்கள், ரயில் கள், விமானங்களில் பயணம் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

* அனைத்து வணிக வளாகங்களிலும் ஒருவருக்கொருவர் ஒரு மீட்டர் இடைவெளியில் வரும் வகையில் ஏற்பாடு செய்வது நல்லது.

* வியாபாரிகள் சங்கத்தினர் கூட்டங்கள் நடத்துவதை தவிர்க்க வேண்டும். சந்தைகளில் மக்கள் நெருக்கமாக இருப்பதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

* அனைத்து மருத்துவமனைகளிலும் கொரோனா வைரஸ் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், சிறுவர்களிடம் எப்படி பழக வேண்டும்? என்பதை மருத்துவமனைக்கு வருபவர்களிடம் டாக்டர்கள் அறிவுறுத்த வேண்டும்.

* ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது கைகுலுக்குவதை தவிர்க்கவும். பாசத்துடன் கைபிடிப்பதையும், கட்டிப்பிடிப்பதையும் தவிர்க்க வேண்டும்.

* ஒன்லைனில் பொருட்கள் வாங்கும் போது மிகவும் கவனம் தேவை. எங்கிருந்து என்ன பொருட்கள் வாங்குகிறோம்? என்பதில் கூடுதல் கவனம் வேண்டும்.

* கொரோனா வைரஸ் தொடர்பான வதந்திகளை நம்பாதீர்கள். வாட்ஸ் – அப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் தேவையற்ற தகவலை பரப்பாமல் அமைதி காப்பது நமது கடமையாகும்.

– மேற்கண்ட கட்டுப்பாடுகளை மத்திய அரசு விதித்துள்ளது.

# எவ்வளவு நேரம் உயிரோடு இருக்கும்?

கொரோனா வைரஸ் வெளிப்பரப்பில் எவ்வளவு நேரம் உயிரோடு இருக்கும்என்று அமெரிக்க விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர்.

ட்ராக்கி மவுண்டெய்ன் ஆய்வகத்தின் வைரஸ் சூழலியல் துறை இந்த ஆய்வை மேற்கொண்டது. அதன் முடிவுகளை துறைத் தலைவர் வின்சென்ட் மன்ஸ்டெர் வெளியிட்டார்.

பிளாஸ்டிக் மற்றும் துருப்பிடிக்காத இரும்பு என்பவற்றில் கொரோனா வைரஸ் படிந்தால் அது 3 நாள்கள் வரை உயிரோடு இருக்கும் என்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

காகித அட்டை உள்ளிட்ட தடிப்பான காகிதங்களில் படிந்தால் 24 மணி நேரமும் காற்றில் 3 மணி நேரமும் செம்பில் 4 மணிநேரமும் கொரோனா வைரஸ் உயிருடன் இருக்கும் என்றும் மன்ஸ்டெர் தெரிவித்தார்.

## ஈராக்கில் அமெ. படைகள் மீது மீண்டும் தாக்குதல்

பக்தாத், மார்ச் 18

ஈராக்கில் உள்ள அமெரிக்கப்படைகள் மீது ஒரே வாரத்தில் மூன்றாவது தடவையாகவும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தலைநர் பக்தாத்தில் அருகில் உள்ள பஸ்மயா இராணுவத் தளத்தின் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. திங்கட்கிழமை இரவு நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் ஏற்பட்ட சேத விவரங்கள் தொடர்பில் உடனடியாக அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை.

முகாமிற்குள் இரண்டு தடவைகள் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன என்று மட்டும் அமெரிக்க இராணுவத் தகவல் தொடர்பாளர் தெரிவித்தார்.

ஈரான் ஆதரவோடு இயங்கும் ஹிஸ்புல்லா இயக்கமே தாக்குதலுக்குப் பொறுப்பு என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

# 200,000

## கொரோனாவால் இதுவரை தாக்கப்பட்டோர் எண்ணிக்கை

லண்டன். மார்ச் 18

உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா எனப்படும் கொவிட் 19 வைரஸ் தொற்றினால் இது வரையில் ஒரு லட்சத்து 98 ஆயிரத்து 373 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

159 நாடுகள் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளன. 7 ஆயிரத்து 981 பேர் உயிரிழந்துள்ளனர் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகக் கூடுதலாக சீனாவில் 82 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அடுத்து இத்தாலியில் 27 ஆயிரத்து 980 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஈரானில் 16 ஆயிரத்து 169 பேரும் ஸ்பெயினில் 11 ஆயிரத்து 178 பேரும், தென் கொரியாவில் 8 ஆயிரத்து 320 பேரும், பிரான்ஸில் 6 ஆயிரத்து 573 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 82 ஆயிரத்து 763 பேர் இதுவரையில் குணமாகியுள்ளனர் என்றும் உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

இத்தாலியில் கடந்த 3 நாள்களில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கு நேற்று ஒரே நாளில் 350 பேர் உயிரிழந்திருக்கின்றமை கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இத்தாலியை அடுத்து ஸ்பெயினில் 190 பேரும் ஈரானில் 135 பேரும் உயிரிழந்திருக்கின்றனர்.

நோய்த் தொற்று பரவலைத் தடுப்பதற்கு ஐரோப்பிய நாடுகள் போர்க் கால அடிப்படையில் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளன.

இங்கிலாந்தில் தடையை மீறி நட்சத்திர உல்லாச விடுதியில் குளித்துக்கொண்டிருந்த ஸ்வெயின் நாட்டுப் பெண் கைது செய்யப்பட்டார்.

கொரோனா பரவரைத் தடுப்பதற்காக பொது இடங்களில் குளிப்பது இங்கிலாந்தில் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையடுத்து பல நாடுகளும் சிறப்பு வைத்தியசாலைகளை அவசர அவசரமாகக் கட்டி வருகின்றன.

ஆயிரம் படுக்கை வசதிகளைக் கொண்ட வைத்தியசாலையை சீனா 8 நாள்களில் உருவாக்கியதைத் தொடர்ந்து ரஷ்யாவும் அவசரகால மருத்துவமனை ஒன்றை உருவாக்கி இருந்தது. தற்போது 500 படுக்கை வசதிகளைக் கொண்ட இரண்டாவது மருத்துவமனையையும் அது உருவாக்கி வருகிறது. மூன்றாவது நாடாக ஜேர்மனியும் ஆயிரம் படுக்கை வசதி கொண்ட அவசர கால மருத்துவமனை ஒன்றை உருவாக்கி வருகின்றது.

## சீனாவின் கருத்துக்கு அமெ. கடும் கண்டனம்



வொஷிங்ரன், மார்ச் 18

தான்தோன்றித் தனமான கருத்துக்களால் சர்ச்சைகளில் சிக்கிவரும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கொரோனா வைரஸை சீன வைரஸ் என்று கூறியதால் ஏற்பட்ட சர்ச்சை இராஜதந்திர மட்டத்தை எட்டியுள்ளது. ட்ரம்பின் கருத்துக்கு சீனா சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு அமெரிக்கா தனது முறைப்படியான கடும் கண்டனத்தை தனது நாட்டுக்கான சீனத் தூதுவரை அழைத்துத் தெரிவித்தது.

கொரோனா வைரஸ் சீனாவின் வுஹான் மாகாணத்திலேயே கண்டறியப்பட்டது. இந்த நிலையில் தனது ருவிற்றர் பதிவில் அதனை சீன வைரஸ் என்று அமெரிக்க அதிபர் குறிப்பிட்டிருந்தார். வேண்டுமென்றே தவறான புரிதலை உலக மக்களுக்கு ஏற்படுத்தவே ட்ரம்ப் இவ்வாறு செய்கிறார் என்று குற்றஞ்சாட்டிய சீனாவில் சார்பில் இந்த வைரஸ் அமெரிக்காவினாலேயே உருவாக்கப்பட்டு அதன் இராணுவத்தின் மூலம் சீனாவில் பரவச் செய்யப்பட்டது என்றது.

சீனாவின் வெளியுறவு செய்தித் தொடர்பாளர் சுவோ லிஜியான் இந்தக் கருத்தைக் கடந்த வாரம் ருவிட்டரில் பதிவு செய்தார்.

இதை அடுத்து வொஷிங்ரனில் உள்ள சீனத் தூதரை அழைத்து அமெரிக்கா தனது முறைப்படியான கண்டனத்தைத் தெரிவித்தது.

அமெரிக்க அதிபரின் சீன வைரஸ் கருத்துக்கு நாட்டுக்குள்ளேயே கடும் கண்டனங்கள் தெரிவிக்கப்படுகின்றன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள நியூயோர்க் மேயர் பில் டி பிளாசியோ, இது அமெரிக்கர்களுக்கும் அங்குள்ள ஆசியர்களுக்கும் இடையே பிளவை ஏற்படுத்தும் முயற்சி எனவும் கூறியுள்ளார்.

## சுற்றுலாப் பயணிகளை வெளியேற்றும் இஸ்ரேல்

காஸா, மார்ச் 18

தமது நாட்டில் உள்ள வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அனைவரையும் உடனடியாக வெளியேறுமாறு இஸ்ரேல் அறிவித்துள்ளது.

கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கையின் ஒரு பகுதியாக விமான நிலையங்கள் மூடப்படலாம் என்கிற நிலை இருப்பதனால் சுற்றுலாப் பயணிகளை உடனடியாகத் தத்தமது நாடுகளுக்குத் திரும்பும்படி அது அறிவித்துள்ளது.

150 நாடுகளுக்குப் பரவியுள்ள கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த ஒவ்வொரு நாடும் தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. அதன் முதற்படியாக தொற்று ஏற்பட்டுள்ள நாடுகளில் இருந்தான விமானப் பயணங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஐரோப்பிய நாடுகள் தமது எல்லைகளை மூடியுள்ளன.

இஸ்ரேலில் இதுவரையில் 213 பேருக்கு கொரோனா வைரஸ் பரவியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து தடுப்பு நடவடிக்கைகளில் அந்த நாட்டு அரசும் தீவிரமாக இறங்கியுள்ளது.

இதன் ஒரு பகுதியாகவே சுற்றுலாப் பயணிகளை வெளியேறுமாறு அது கேட்டுள்ளது.

## அமெரிக்காவின் 50 மாநிலங்களையும் தாக்கியது கொரோனா

**100 பேர் இறப்பு**
**5.500 பேருக்கு பாதிப்பு**

வோஷடன். மார்ச் 18

அமெரிக்காவின் 50ஆவது மாநிலத்திலும் கொரோனா எனப்படும் கொவிட் 19 வைரஸ்த் தாக்கம் பரவியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு வெர்ஜினியா மாநிலத்தில் முதல் நபருக்கு நோய்த் தாக்கம் உறுதிப்படுத்தப்பட்டதாக ஆளுநர் ஜிம் யஸ்ரிஸ் செவ்வாய்க்கிழமை அறிவித்தார். இதையடுத்து அமெரிக்காவில் இந்த வைரஸ் தொற்று இல்லாத மாநிலம் எதுவும் இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னதாக அரசின் உத்தியோகபூர்வ அறிவிப்புகளின்படி இதுவரையில் அமெரிக்காவில் 100 பேர் கொரோனா வைரஸினால் உயிரிழந்துள்ளனர். 5 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 37 மாநிலங்கள் பாடசாலைகளை மூடியுள்ளன. 10 பேருக்கு மேல் ஒரு இடத்தில் ஒன்று சேர வேண்டாம் என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

கலிபோர்னியா மாநிலத்தின் 20 பிரதேசங்களில் மக்களை வீடுகளிலேயே இருக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. அவசிய தேவைகள் இருந்தால் தவிர வெளியே வரவேண்டாம் என்று கேட்கப்பட்டுள்ளதால் கிட்டத்தட்ட 80 லட்சம் மக்கள் முடக்கப்பட்டுள்ளனர்.

# கொரோனா தடுப்புக் கூட்டம் மீது தாய்லாந்தில் தாக்குதல்

## குண்டுகள் வெடித்ததில் 25 பேர் காயம்

மணிலா, மார்ச் 18

கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டத்தின் மீது தாய்லாந்தில் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் அதிகாரிகள், படையினர் உள்ளிட்ட 25 பேர் படுகாயமடைந்தனர்.

ஏனைய நாடுகளைப் போலவே தாய்லாந்திலும் கொரோனா வைரஸின் தாக்கம் பரவி வருகின்றது. அதனைக் கட்டுப்படுத்த அரச அதிகாரிகள் தீவிர நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளனர்.



யலா மாகாணத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அங்குள்ள அரசு அலுவலகத்தில் நேற்று ஆலோசனை கூட்டம் நடைபெற இருந்தது. கூட்டத்தில் பங்கேற்க பல்வேறு அதிகாரிகள் அலுவலகத்திற்கு வந்திருந்தனர். பாதுகாப்பு மற்றும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காகப் படையினரும் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த மர்ம நபர் தான் வைத்திருந்த கையெறி குண்டு ஒன்றை அலுவலகத்திற்குள் வீசினார். இந்த தாக்குதல் நடந்த சில நிமிடங்களில் அலுவலகத்திற்கு வெளியேயும் வெடிகுண்டுகளால் நிரப்பி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றும் வெடித்து சிதறியது.

தாக்குதலுக்கு உடனடியாக யாரும் பொறுப்பேற்கவில்லை.


Kajamugan
Hardware
கஜமுகன்
ஹாட்வெயர்
கட்டடப் பொருள்கள், லங்கா கம்பி, பைப் வகைகள், சிமெந்து,
மெச்சன் மெஸ் வலைகள், பெயின்ற் வகைகள் மற்றும்
pepsi soda & Accessories அனைத்தையும்
பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரே இடம்....
NIPPON CEMENT
147, 149, Stanley Road,
Jaffna.
Tel : 021 222 2833, 021 222 7174, Fax : 021 222 2368
E.mail : Kajamuganhw@hotmail.com
147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


Obtain a world class UK Qualification
UNIVERSITY of GREENWICH
PIBT
BSc.(Hons) in Computing
BSc.(Hons) in
Computer Systems and Networking
Leeds Trinity University
PIBT
BA.(Hons) in
Business and Management
Business and Marketing
Business and Accounting
25வது ஆண்டில் காலடி
பதித்திருக்கும் உங்கள் IIS உடன்
இணைந்து வாழ்வை வளமாக்கிக்
கொள்ளுங்கள்
BTEC
Pearson
HND
Computing
Business Management
Civil Engineering
Why should you select IIS ?
✓ IIS set high standards for teaching quality.
✓ The lecture panel consist of eminent academic and industry experts.
✓ Facilities for extracurricular activities.
✓ Bank loan facilities and easy payment schemes.
✓ Industrial placement at leading companies.
Hotline : 077 757 0038
IIS CITY CAMPUS
# 441 Clock Tower ROAD, JAFFNA.
TEL :021 222 8060 web: iis.edu.lk
25 YEAR
1996 2020

# உக்திய மரங்களுக்கு...

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆக, கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக ஏகபோக மக்களாணையை பெற்றுக் கொண்டிருக்கும் தமிழ்த்தேசிய கூட்டமைப் பிற்கு எதிர்த்தரப்பில், மக்களாதரவு பெற்ற வலுவான கட்சியொன்று அரங்கிற்கு வருவது ஆரோக்கியமானதுதான்.

ஆனால், கட்சியின் பெயர்களை மாற்றி விட்டு மக்களுக்கு முன்னால் வந்து நிற்கப் போகின்றவர்கள் அதே விக்னேஸ்வரனும், அதே சுரேஷ் பிரேமச்சந்திரனும்தானே.

அதேபோல, தாங்கள் வீட்டுச்சின்னத்தில் நிற்கும்வரைக்கும் அசைக்கமுடியாது என்ற வீம்போடு களம்காண வருகின்ற தமிழரசுக்கட்சி இன்னும் எவ்வளவு காலத்திற்குத்தான் ஒரு வயோதிபர் மடமாக தூசிதட்டிக்கொண்டிருக் கப்போகிறது?

சிறிலங்கா கிரிக்கெட் அணியைவிட்டு வெளியேற மாட்டேன் என்று நாற்பது வயதுக் குப் பிறகும் அடம்பிடித்துக்கொண்டிருந்த மாத்தறை மைந்தன் சனத் ஜயசூரியபோல மாவை சேனாதிராசா 77 வயதிலும் அரசி யலைவிடமாட்டேன் என்று புரட்சிசெய்வதற்கு கலண்டரைக் கிழித்துக்கொண்டிருக்கிறார்.

சித்தார்த்தன், செல்வம், அடைக்கலநாதன் போன்றவர்கள் போர் முடிந்த பின்னர் கடந்த பத்து வருடங்களாக தாங்கள் செய்த அரசியல் என்ன என்பதை நேர்மையாக மதிப்பீடு செய் தாலே ஒரு நல்ல முடிவுக்கு வரமுடியும்.

சரவணபவன் போன்றவர்கள் சமூகத்துக்கு நல்லது செய்யவேண்டும் என்று பிரியப்பட் டால், அதற்கு அரசியல்தான் வழியென்று கட்டாயமெதுவும் இல்லை.

பல்வேறு தரப்புக்களோடும் பல்வேறு மனி தர்களோடும் முரண்பாடுகளுடன் பயணித்துக் கொண்டவர் என்ற அடிப்படையில் இப்போ தைக்கு சுமந்திரனின் பங்கும் பணியும் தமிழர் அரசியலுக்கு அத்தியாவசியமாக உள்ளதே தவிர –

கட்சியை அடுத்த ஐந்து வருடங்களுக்குள் நேர் சீராக்கிவிட்டு, அவர்கூட பின்னுக்கு வரு வதுதான் பொருத்தமான முடிவாக இருக்க முடியும்.

இவ்வாறு இவர்கள் ஒதுங்கி புதியவர்க ளுக்கு – இளையவர்களுக்கு – வழியும் வாய்ப் பம் கொடுப்பதன் மூலம் சமூகத்தின் ஆரோக் கியமாகவேண்டும் என்று கூறுவது ஏதோ அவர்களை அரசியலில் இருந்து அப்புறப்படுத் துவதற்கான அறைகூவல் அல்ல. அவர்கள் இந்தப் புதியவர்களை பின்னிருந்து வழிகாட் டலாம். அடுத்த தலைமுறைக்கான சாரதி களாக செயற்படலாம்.

அந்த அரசியல் பண்பாடு ஏன் தமிழர் அர சியலுக்குள் நுழையவே மாட்டேன் என்கிறது?

இன்று உலகின் ஆளுமை மிக்க தலை வர்களாக பலராலும் கருதப்படுவர்களும் அவர் கள் மேற்கொள்கின்ற முடிவுகள் தொடர்பில் பரந்துபட்டளவில் வரவேற்கப்படுகிறவர்களும் யார் என்று பாத்தால் –

கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ருடோ, நியூ ஸிலாந்துப் பிரதமர் ஜஸிந்தா ஆர்டன், பிரெஞ் சுப் பிரதமர் இமானுவேல் மகரோன் போன்ற இளைய தலைவர்கள்.

கடந்த வருடம் நடந்து முடிந்த தேர்தலில் வெற்றி பெற்று பின்லாந்தின் பிரதமராக தெரி வாகியிருக்கும் சன்னா மரீனுக்கு வயது 34.

தற்போதுள்ள வேகமான உலகம் வீரியம் மிக்க இளைய தலைவர்களை கோரி நிற்கிறது. அவர்களோடு ஒத்து ஓடக்கூடிய ஆளுமை கொண்டவர்களைக் கேட்கிறது.

இன்னும் எவ்வளவு காலத்துக்கு போரைக் காண்பித்துக்கொண்டும், அதற்கு காரண மானவர்களை காண்பித்துக்கொண்டும் தலை முறைகளின் எழுச்சியையும் வளர்ச்சியையும் கரைவேட்டிகளின் கைகளிலும் நரைமுடி களில் தலைகளிலும் வைத்துவிட்டு கைநமு வப்போகிறது இந்த சமூகம்?

தமிழர் அரசியல் இனியும் பழிவாங்கல் களுக்கும் அணிகள் சேர்ப்பதற்குமான உறுபத் திக் கூடாரங்களாகப் புழுத்து நாறாமல் –

ஆளுமைகளை உருவாக்கி மக்கள் தலை வர்களை எழுச்சிகொள்ளச்செய்கின்ற பாசறை களாக மாறவேண்டும்.

அழிக்க வருகின்ற ஆயுதங்கள் – வைரஸ் வரைக் கூட – எல்லாமே புதிதாக மாறிவிட்ட நிலையில், ஆக்கத்துக்கான வழிகளும் அதில் இடுபவர்களும்தான் பழசுகளாகவே கிடக்கி றார்கள்.

# முஸ்லிம் காங்கிரஸ் – மக்கள் காங்கிரஸ் கூட்டணியை அம்பாறை மாவட்டத்தில் அமைக்கும் முயற்சி தோல்வி!

கொழும்பு,மார்ச் 18

திகாமடுல்ல (அம்பாறை) மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் கூட்டணியில் இணைவதை இலங்கை மக்கள் காங்கிரஸ் நிராகரித்து விட்டது என்றும் இது தொடர்பில் உலமாக்களுடனான சந்திப்பு தோல்வி யில் முடிந்தது என்றும் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளவை வருமாறு: –

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன நாடாளுமன்ற தேர்தலில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இணைந்து போட்டியிடுவ தால் திகாமடுல்ல மாவட்டத்தை வெற்றிகொள்ளும் வாய்ப்பு கிட்டும். இதனால் சமூகம் ஒற்றுமைப்பட்டுவிட்டது என்ற பலமான செய்தியை முழு நாட்டுக்கும் கொடுக்க முடியும். அதற்காக எத்தகைய விட்டுக்கொடுப்புகளுக் கும் தயாராக இருப்பதாக ரவூப் ஹக்கீம் நம்பிக்கை வெளியிட்டபோதிலும், அந்தக் கோரிக்கையை றிஷாத் பதியுதீன் மற்றும் வை.எல்.எஸ். ஹமீட் ஆகியோர் நிரா கரித்துவிட்டனர் என முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அங்கு இரு கட்சிகளும் சஜித் பிரேமதாஸ தலைமை யிலான ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இணைந்து போட்டியிடுவதன் அவசியத்தை வலியுறுத்தி மூத்த அரசியல்வாதி ஏ.எச்.எம். பௌஸியின் ஏற்பாட்டில், அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முற்பகலிலும் இரவிலும் இரு கட்டங்களாக நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மௌலவி எஸ்.எச். ஆதம்பாவா தலைமையில் அம்பாறை மாவட்ட உலமாக்கள் ஆறு பேரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் ரவூப் ஹக்கீம், செயலாளர் ஜனாதிபதி சட்டத் தரணி நிசாம் காரியப்பர், கட்சியின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர்கள், முன்னாள் கிழக்கு மகாணசபை உறுப்பினர் ஏ.எல். தவம் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தரப்பில் அதன் தலைவர் றிஷாத் பதியுதீன், வை.எல்.எஸ். ஹமீத், முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் அமீர் அலி ஆகியோர் கலந்துகொண் டனர்.

இச்சந்திப்பின் ஆரம்பத்தில் இரண்டு கட்சிகளும் ஐக்கிய மக்கள் சக்தியில் கூட்டாகச் சேர்ந்து திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிடுவதனால் ஏற்படக்கூடிய நன்மை களை முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நிசாம் காரியப் பர், முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ், அக்கட்சியின் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரான ஏ.எல். தவம் ஆகியோர் பள்ளிவிவாரங் களுடன் விவரித்துக் கூறினர். இவ்வாறு ஒன்றுபடுவ தன் ஊடாக மாவட்டத்தை வெற்றிகொள்ளக்கூடிய சூழ்நிலை முன்னொருபோதும் இருக்கவில்லை என் றும், இந்த வாய்ப்பைத் தவறவிட்டால் இனியொருபோ தும் அது சாத்திய மில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட் டினர்.

எவ்வாறாயினும், இவ்விரு கட்சிகளும் திகாமடுல்ல மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து போட்டியிடுவதால் போதிய வெற்றிவாய்ப்புகள் இல்லை யென்று வை.எல்.எஸ். ஹமீத் அவர் பக்கக் கருத்துகளை சில பள்ளிவிவரங்களுடன் முன்வைத்தபோது, றிஷாத் பதியுத்தீனும் அவருக்கு ஆதரவாகவிருந்தார். தனித் துப் போட்டியிடுவதனாலேயே தமது கட்சிக்கான ஆச னத்தை உறுதிப்படுத்தலாம் என்ற நிலைப்பாட்டில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தரப்பினர் நெடுகிலும் இருந்தனர் என முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஒற்றுமையின் அவசியம் மற்றும் இறைவனின் உதவி பற்றிய அல்குர்ஆன் திரு வசனங்களைக் குறிப் பிட்டு உலமாக்கள் சமூகத்தின் வெற்றியை முன்னி லைப்படுத்தி பயனுள்ள ஆலோசனைகளை இக் கலந்துரையாடலின்போது தெரிவித்தமை குறிப்பிடத் தக்கது.

திங்கட்கிழமை காலையிலும் இரவிலுமாக ஏறத்தாழ நான்கரை மணிநேரம் இப்பேச்சு இடம்பெற்றபோதிலும், திகாமடுல்ல மாவட்டத்தில் இரு கட்சிகளும் இணைந்து போட்டியிடும் விடயத்தில் ஆரம்பம் முதலே அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் கலந்துகொண்ட வர்கள் மத்தியில் எவ்வித நெகிழ்வுத்தன்மை காணப் படாதமையோடு, அக்கட்சியினர் இது விடயத்தில் ஓர் உடன்பாட்டுக்கு வர மறுத்துவிட்டனர் என முஸ்லிம் காங்கிரஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# இலங்கைக்கு சட்ட விரோதமாக தப்ப முயன்ற 3 இலங்கைத் தமிழர் தனுஷ்கோடியில் கைது!

## கடத்தல்களுடன் தொடர்புள்ளதா என உளவுத்துறை தீவிர விசாரணை

ராமேஸ்வரம்,மார்ச் 18

இலங்கைக்குச் சட்ட விரோதமாகத் தப்ப முயன்றனர் எனக் கூறப்படும் இலங்கையைச் சேர்ந்த மூவர் ராமேஸ் வரத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்குக் கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புள்ளதா என உளவுத் துறை தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர் எனத் தமிழகச் செய்திகள் தெரிவித்தன.

ராமேஸ்வரம் தனியார் தங்கும் விடுதியில் இலங்கை செல்லும் திட்டத்துடன் இலங்கை சேர்ந்த 3 பேர் தங்கியி ருக்கின்றனர் எனத் தமிழகக் கடலோர காவல் குழுமப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலயடுத்து ராமேஸ்வரம் பஸ் நிலையத்தில் நடத்திய சோதனையில் 3 இலங்கை அகதிகள் பிடிபட்டனர்.

விசாரணையில், இலங்கை, மன்னார் மாவட்டத்தை சேர்ந்த வரகுணன் (30), யாழ்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த அருள் வசந்தன் (42), வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த மயூரான் (28) ஆகிய மூவரும் தமிழகத்தில் உள்ள வெவ்வேறு அகதிகள் முகாமிகளில் வசித்து வந் தனர் எனவும், தனுஷ்கோடிக் கடல் வழியாக சட்டவிரோ தமான முறையில் கள்ளதோணியில் இலங்கைக்குத் தப்பி செல்லத் தாங்கள் தயாராக இருந்தனர் எனவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து மூவரையும் கைது செய்த தமிழகக் கடலோரக் காவல் குழுமப் பொலிஸார் வழக்கு பதிவு செய்து தனுஷ்கோடி கடலோரக் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணை யின் பின்னர் ராமேஸ்வரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத் தப்பட்டுவர்கள் புழல் சிறையில் அடைக்கப்படுவார்கள்.

மேலும் கைது செய்யப்பட்ட நபர்கள் காவல் துறை யின் விசாரணையின் போது தாங்கள் இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு போரின் போது தங்களது உயிர்களைக் காப்பாற்றத் தமிழகத்திற்கு அகதிகளாக வந்தனர் எனவும் தற்போது இலங்கையில் பிரச்சினை இல்லாமல் இயல்பு நிலைமை திரும்பியதாக தங்களது உறவினர்கள் கூறியமையை அடுத்து இலங்கைக்குச் சட்டவிரோதமான முறையில் திரும்பிச் செல்ல ராமேஸ் வரத்தில் உள்ள தனியார் தங்கும் விடுதியில் தங்கியிருந் தனர் எனவும் தெரிவித்துள்ளனர்.



தமிழகத்தில் இருந்து இலங்கை அழைத்துச் செல்ல இலங்கை மன்னாரைச் சேர்ந்த நந்தா என்பவரிடம் தலா 1 லட்சம் என 3 லட்சம் ரூபா இலங்கைப் பணம் பிடிபட்டவர்களின் உறவினர்கள் கொடுத்துள்ளனர் என வும் தனுஷ்கோடி பகுதியைச் சேர்ந்த முகவர் சதீஸ் என்பவர் தனுஷ்கோடியில் இருந்து படகில் அனுப்பி வைக்க ராமேஸ்வரம் வரச் சொன்னார் எனவும் தெரி வித்தனர்.

இந்நிலையில், சமீப காலமாக தனுஷ்கோடி கடல் பகுதியில் இருந்து கஞ்சாவும் இலங்கையில் இருந்து தங்க கட்டிகளும் கடத்தப்பட்டு வருகிறது. எனவே பிடிபட்ட மூன்று பேரும் கடத்தல் சம்பவங்களில் ஈடுபடுவதற் காக ராமேஸ்வரம் வந்தனரா என்ற கோணத்தில் உளவுத்துறை அதிகாரிகள் சுமார் ஐந்து மணி நேரத் திற்கும் மேலாக அவர்களிடம் விசாரித்து வருகின்ற னர்.

இந்தியப் பணம் மற்றும் பாஸ்போர்ட், இலங்கை குடியுரிமை ஆவணங்கள் மற்றும் தமிழக வங்கி கணக்கு அட்டைகள் என்பன அவர்களிடமிருந்து பறிமுதல் செய் யப்பட்டுள்ளன எனவும் கூறப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# வன்னியை ஒதுக்குகிறார் விக்கி!

## வவுனியா அமைப்பாளர் குற்றச்சாட்டு

வவுனியா, மார்ச் 19

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன் உட்பட்டவர்கள் யாழ்ப்பாணத்தை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டுசெயற்படுகின்றமையுடன் வன்னித் தொகுதியைப் புறந்தள்ளக் கொழும்பில் இருந்து ஒருவரை வன்னித் தேர்தல் தொகுதியில் வேட்பாளராக நிறுத்தியுள்ளனர் என அந்தக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

எனினும், வவுனியாவில் பிரேரிக்கப்பட்ட வேட்பாளர் மீது குற்றவியல் வழக்கு நிலுவையில் இருப்பதாலேயே அவரை தவிர்த்ததாக விக்னேஸ்வரன் தரப்பு விளக்கமளித்துள்ளது.

வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே சிறிதரன் இந்தப் பரபரப்பு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வன்னித் தேர்தல் தொகுதியில் வேட்பாளர்களை நியமிக்கும் பொறுப்பு எனக்கு மத்திய குழுவால் வழங்கப்பட்டது. அருந்தவபாலனும் அதற்கு உடன்பட்டிருந்தார். அதன் அடிப்படையில் பலருடன் கதைத்தபோதும் யாரும் கட்சியில் இணைந்து போட்டியிட முன்வரவில்லை. எனினும் நான் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா என அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று நல்ல வேட்பாளர்களை தெரிவு செய்திருந்தேன். அதன் பிரகாரம் வவுனியா மாவட்டத்திலும் சந்திரகுமார் கண்ணனை வேட்பாளராகத் தெரிவு செய்தபோது வன்னியின் முதன்மை வேட்பாளர் மற்றும் எமது கூட்டின் செயலாளர் என்ற வகையில் சிவசக்தி ஆனந்தனுடனும் உரையாடியிருந்தேன். அவர் சிறந்த ஒருவரைத் தெரிவு செய்துள்ளீர்கள், அழைத்து வாருங்கள் எனத் தெரிவித்திருந்தார். அதன் பிரகாரம் நான் அவருக்கு வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு உத்தரவாதம் வழங்கியிருந்தேன்.

எனினும் இன்று வெளியில் நடமாட முடியாத வகையில் தமிழ் மக்கள் கூட்டணியினர் செய்துவிட்டனர். கண்ணன் என்பவரை தெருவில் நான் விட்டுவிட்டதாக மற்றவர் கூறும் அளவுக்கு நடந்து விட்டனர். எனினும் நான் விக்னேஸ்வரனை மதிக்கின்றேன். எனினும் அவருடன் கூட இருப்பவர்கள் சிலர் தாங்கள் தான் விக்னேஸ்வரனின் கட்சிக்கு அடுத்த தலைவர் என்ற நிலையில் கனவு கண்டு செயற்பட்டு வருகின்றனர்.

அந்தக் கட்சியில் மத்தியகுழு என்பது போலியாக உள்ளதே தவிர அங்கு எதுவும் தீர்மானிக்கப்படுவதில்லை. இந்நிலையில் நான் தொடர்ந்தும் தமிழ் மக்கள் கூட்டணியில் அங்கம் வகிக்க விரும்பவில்லை. இதன் காரணமாக வவுனியா மாவட்ட அமைப்பாளர் பதவியில் இருந்தும் உறுப்புறுமையில் இருந்தும் விலகிக்கொள்கின்றேன்.

அதுமாத்திரமின்றி எமது அரசியல் நிலைப்பாடுகள் இவ்வாறுதான் செல்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிகராக மாற்றுத்தலைமையாக உருவாக எண்ணியவர்களும் அந்தச் சிந்தனையுடன் சென்றவர்களும் இவ்வாறான நிலையில் காணப்படுகின்றமையை எண்ணி வெட்கப்படுகின்றேன். எமது அரசியல் தலைவர்கள் அனை



வரும் ஒரே விதமானவர்களாகவே இருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்துத்தலைமையை எண்ணி நாம் செல்வது மடமைத்தனம். கிழக்கு மாகாணம் போல் வன்னியிலும் ஒரு தலைமை உருவாகுமாக இருந்தால் அதில் இணைந்து பயணிப்பேன்.

விக்னேஸ்வரன் தலைமையில் 'எழுக தமிழ்' நிகழ்வு நடந்தபோது வவுனியாவில் இருந்து 13 பஸ்களில் மக்களைக் கொண்டு சென்றிருந்தோம். அன்று நாம் அவர்களைக் கொண்டு சென்றிருக்காவிட்டால் சொற்பமானவர்களே இருந்திருப்பார்கள். நாம் மக்களைக் கொண்டு சென்றமையினாலேயே அங்கு மக்கள் திரளாகக் காணப்பட்டனர்.

எழுக தமிழ் நிகழ்வு நடந்த பின்னர் இடம்பெற்ற விருந்துபசாரத்துக்குச் சென்றபோது அங்கு யாழ்ப்பாணத்தை தவிர வேறு ஒரு மாவட்டத்தை சேர்ந்தவர்களும் அந்தப் பேரவையில் இருக்கவில்லை. அப்போதே நான், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியாவைச் சேர்ந்த ஒருவரும் இல்லாத நிலை காணப்படுகின்றது ஏன், அங்கு தமிழர்கள் இல்லையா என அவர்களிடம் கேட்டேன். இவ்வாறான நிலைதான் அந்தக் கட்சிக்குள் காணப்படுகின்றது. விக்னேஸ்வரனும் ஏனைய நான்கு மாவட்டங்கள் தொடர்பில் சிந்திப்பதற்குத் தயாராக இல்லை.

வன்னியில் இரண்டு ஆசனங்களைக் கைப்பற்றக்கூடிய நிலையில் வேட்பாளர்களை தெரிவு செய்துள்ளபோதிலும் கொழும்பில் இருந்து ஒருவரை வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிட வைத்துள்ள தமிழ் மக்கள் கூட்டணியானது இன்று ஒரு ஆசனத்தைக்கூட பெற முடியாத அளவுக்கு உள்ளாகியுள்ளது – என்றார்.

இது குறித்து, தமிழ் மக்கள் கூட்டணியினரிடம் தொடர்பு கொண்டு வினவியபோது, வவுனியா மாவட்ட அமைப்பாளரினால் பிரேரிக்கப்பட்ட வேட்பாளர் மீது வங்கி மோசடி தொடர்பான குற்றவியல் வழக்கு நிலுவையில் உள்ளது. அவரது பின்னணி குறித்து ஆராய்ந்தபோது இந்த விடயம் தெரிய வந்தது. வழக்கு தொடர்புடைய சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடிய பின்னர், குறிப்பிட்ட வேட்பாளருக்கு ஆசனம் வழங்குவதில்லையென முடிவு செய்து அவரை அழைத்துப் பேசினோம். பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் என்பதால், வழக்குகளை முடித்த பின்னர் மாகாணசபை தேர்தலிலோ, இன்னொரு தேர்தலிலோ வாய்ப்பளிக்கிறோம், நீங்கள் செய்யும் சமூகசேவைகளில் மதிப்பு வைத்திருக்கிறோம் என அவரிடமே சொல்லியிருந்தோம். ஆனால், வவுனியா மாவட்ட அமைப்பாளர் அவசரகதியில் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தியுள்ளார் – என்றார்கள் எனத் தமிழ்ப் பக்கம் செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

## சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் தாமதமாகும்!

கல்விப் பொதுத் தராதர சாதாரணப்பரீட்சைமுடிவுகள் வெளியாவதில் தாமதம் ஏற்படுமென தெரிவிக்கப்படுகிறது.

அரசு அறிவித்துள்ள விடுமுறைகள், பரீட்சைமுடிவுகளை வெளியிடுவதில் தாக்கம் செலுத்துவதாலேயே தாமதம் ஏற்படுமென பரீட்சைகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் பணிகள் முடிந்துவிட்டாலும், ஏனையபணிகளில் தாமதம் ஏற்படுவதாகவும், சிறிய தாமதத்துடன் முடிவுகள் வெளியாகுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## ஒரு வயது குழந்தைக்கும் கொரோனா!

இலங்கையில்கொரோனா தாக்கத்துக் குள்ளானவர்களில், ஒரு வயதான குழந்தையும் உள்ளடங்குகின்றது.

இத்தாலியில் இருந்து நாடுதிரும்பிய தம்பதியொன்றின் குழந்தையே இவ்வாறு வைரஸ் பாதிப் புக்குள்ளானது.

ஒரு வயதும் ஐந்து மாதங்களுமானகுழந்தையே வைரசால் பாதிக் கப்பட்டது. குழந்தையின் தாயாரும் வைரசால் பாதிக்கப்பட்டுள்ளார். தந்தை தற்போது பரிசோதனையில் உள்ளார்.

## வெளிநாட்டவர்களுக்கு விசா நீடிப்பு!

கொழும்பு, மார்ச் 18

இலங்கை வந்துள்ள வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து வகையான விசாக்களும் செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, விசா செல்லுபடியாகும் காலம், மார்ச் 14 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வெளிநாட்டவர்கள்விசா கட்டணத்தைச் செலுத்தி, அதனை தமது வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகளில் முத்திரையிட்டுநீடித்துக்கொள்ள முடியும். அதற்காக ஏப்ரல் மாதம் 8 ஆம் மற்றும் 9 ஆம் திகதிகளில், ஏதேனும் ஒரு தினத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக் களத்தின் விசா பிரிவுக்கு வருகைதர முடியும். (ஐ)

## யாழ்ப்பாணத்தில் சுயேச்சையாக முற்போக்குத் தமிழ் தேசியக்கட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 19

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முற்போக்கு தமிழ் தேசியக்கட்சி தனித்து சுயேச்சையாக போட்டியிடப்போவதாக அக்கட்சியின் செயலாளர் எஸ்.விஜயகாந்த் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் ஐ.தே.கவில் இணைந்து போட்டியிட விரும்பினோம். அப்போது முன்னாள் அமைச்சரும் யாழ். மாவட்ட அமைப்பாளருமான விஜயகலா எம்மை இணைத்தால் தனது பதவிகள் எல்லாவற்றையும் ராஜினாமா செய்வார் என மிரட்டினார். அதனால் அப்போது கூட்டு சாத்தியப்படவில்லை.தற்போது நாமே விலகி யிருக்கின்றோம்.

எமது கட்சி சாதாரண பாட்டாளி மக்களின் கட்சி.கொழும்பு இறக்குமதிகளோ, கோடீஸ்வரர்களோ அல்லது அரசியல்வாரிசுகளோ இல்லை. மக்களை நம்பியே நாம் தேர்தல் களத்தில் குதித்தோம் – என்றார். (ஐ – 07)

## வெளிநாடுகளிலிருந்து வந்தோருக்கு மருத்துவப் பரிசோதனை கட்டாயம்

முல்லைத்தீவு, மார்ச் 19

முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையில் முள்ளியவளை பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது மக்கள் அதிகமான கூட்டங்கள் கூடுவதை தவிர்க்குமாறும், சுகாதார பழக்க வளக்கங்களை கடைப்பிடிக்குமாறும், அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வெளிநாடுகளில் இருந்து வந்து நிற்பவர்கள் கண்டிப்பாக மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு கொரோனா தொற்று இல்லை என்பதை மருத்துவ அறிக்கை ஊடாக உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பரிசோதனைக்கு உட்படாமல் இருந்தால் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பிரதேசங்களில் இருந்து மாவட்டங்களுக்கு சென்று வருபவர்கள் வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மாவட்ட பொது மருத்துவமனைகளில் பரிசோதனையை மேற்கொள்ளலாம் என்றும் முள்ளிவளைப் பொலிஸார் அறிவித்துள்ளனர். (ஐ)



யாழ் மாவட்டத்தில் போட்டியிடவுள்ள ஐ.தே.கட்சியின் சார்பில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் இன்று காலை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

## அஞ்சல் வாக்களிப்பு விண்ணப்பம் கையளிப்பதற்கான காலம் நீடிப்பு

கொழும்பு,மார்ச் 18

அஞ்சல் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை கையளிப்பதற்கான காலத்தை நீடிக்க தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் நாள்களிலும் அஞ்சல் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது.

அஞ்சல் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களைக் கையளிப்பதற்கான காலம் நேற்று நண்பகல் 12 மணி யுடன் நிறைவடையவிருந்தது.

இந்நிலையில், நேற்று தொடக்கம் எதிர்வரும் 3 நாள்களுக்கு அரசால் விசேட விடுமுறைகள் அறிவிக் கப்பட்டதன் காரணமாக இந்த விண்ணப்பங்கள் ஏற்கும் திகதிகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள் என எனத் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

## இரு வாரங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த இரு வார காலமும் ஊரடங்கு போன்ற ஒரு நிலைமை நாடு முழுவதும் ஏற்படுத்தப்படும். மக்களின் நடமாட்டம் முழுமையாக முடக்கி ஸ்தம்பிக்கச் செய்யப்படும்.

மிக அத்தியாவசிய சேவைகளைத் தவிர ஏனைய அனைத்தும் இடைநிறுத்தப்படும்.

முப்படைகள், பொலிஸ் உட்பட அரசின் முழு அங்கங்களையும் முழு வீச்சில் களத்தில் இறக்கவும் அரச உயர் பீடம் தீர்மானித்திருக்கின்றது.

மார்ச் பத்தாம் திகதிக்கு முன்னர் மேற்கு நாடுகளில் இருந்து நாட்டுக்குள் வந்த சுமார் 110 பேரைத் தேடிக் கண்டறிய முடியாத நிலையில், அவர்கள் அதிகாரிகளுக்கு 'டிமிக்கி' கொடுத்து விட்டு மக்களுக்கு மத்தியில் சேர்ந்து இருக்கின்றார்கள் என்று கூறப்படுகின்றது.

இவர்களில் யாருக்கேனும் கொரோனாத் தொற்று இருந்தால் - அவர்கள் மூலம் வேறு யார் யாரேனுக்கும் அது பரவியிருந்தால் - அவர்கள் அனைவரையும் மடக்கிப் பிடித்து கண்காணிப்புக்குள் கொண்டு வரும் நடவடிக்கையை இரும்புக் கரம் கொண்டு முன்னெடுப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கு முன்னேற்பாடான முதலில் தேர்தல் ஆணையகம் மூலம் தேர்தலை ஒத்திவைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனத் தெரிகின்றது.

தொடர்ந்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு படையினர் உட்பட்ட தரப்புகளுக்கு விசேட அதிகாரங்களை வழங்கவும்–

அவசியப்பட்டால் அவரகால நிலையைப் பிரகடனம் செய்யவும் –

தொடர் நடவடிக்கைகளுக்கு அவசியமானால், கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீறக் கூட்டுவதற்கும் –

அதிகாரத் தரப்புத் தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மூர்க்கத்தனம் மிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தென் கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் உள்ள 11 நாடுகளில் 8 நாடுகளில் இது வரையில் கொவிட் 19 வைரஸின் பரம்பல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தாய்லாந்தில் 177 பேருக்கும் இந்தோனேசியாவில் 134 பேருக்கும் இந்தியாவில் 125 பேருக்கும் இலங்கையில் 43 பேருக்கும் மாலைதீவில் 13 பேருக்கும் பங்களாதேஷில் 5 பேருக்கும் நேபாளம் மற்றும் பூட்டானில் தலா ஒருவருக்கும் நோய்த் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த எண்ணிக்கை விரைவில் மேலும் பல மடங்கு உயரும் என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

"வைரஸ் பரவல் பரவலுக்குரிய பல தொகுதிகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன. உசார் நிலைக்கும் தீவிரமான கண்காணிப்புக்கும் செல்ல வேண்டிய தேவையை உணர்த்தும் அறிகுறி இது, அத்தோடு வைரஸின் பரவலைத் தடுப்பதற்கு மூர்க்கத்தனமானதும் மொத்தச் சமூகத்தை உள்ளடக்கியதுமான நடவடிக்கைகளின் தேவையையும் இது உணர்த்தி நிற்கின்றது. அவசரமாகச் செய்ய வேண்டிய பல நடவடிக்கைகள் உள்ளன" என்றார் மருத்துவர் புனம் சிங்.

கண்டறிவது, சோதிப்பது, சிகிச்சையளிப்பது, தனிமைப்படுத்துவது, நோயாளியுடன் தொடர்புபட்டவர்களைக் கண்டறிவது போன்ற நடவடிக்கைகள் மிகமிக முக்கியமானவை என்று உலக சுகாதார நிறுவனம் வலியுறுத்தியுள்ளது.

## திலீபனை அஞ்சலித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டத்தரணிகள் ந.காண்டீபன், வி.மணிவண்ணன், க.சுகாஷ், சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் ஜெயக்குமார், ஓய்வு பெற்ற அதிபர் மா.கணபதிப்பிள்ளை, நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் வாசுகி சுதாகரன், வலி.கிழக்கு பிரதேசசபை உறுப்பினர் ஞானகுகணேஸ்வரி, செல்வர் பத்மநாதன் (டிலான்) ஆகியோர் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். (ஐ - 07)

## கொரோனா தொற்று அச்சம்;

# வவுனியாவிலிருந்து ஒருவர் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 18

கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் காரணமாக ஒருவர் வவுனியாவிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நேற்றிரவு செவ்வாய்கிழமை வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவரே இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அந்த நபர் கொரோனா விசேட பரிசோதனை நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளான 43 பேர், விசேட வைத்தியக்குழுவின் கண்காணிப்பின் கீழ் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன், கொரோனா தொற்றுக்குள்ளானதாக சந்தேகிக்கப்படும் சுமார் 220 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



யாழ் மாவட்டத்தில் போட்டியிடவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் இன்று காலை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெற்றது. அவரது அணி யாழ் செயலகத்துக்கு வந்தபோது...

# வெளிநாட்டவர் தலைமறைவு!



கொழும்பு, மார்ச் 18

அடையாளம்காணப்பட்ட கொரோனா தொற்றாளர் ஒருவருடன் இருந்த வெளிநாட்டர் ஒருவர் தலைமறைவாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு 7 உணவகம் ஒன்றில் ஒன்றாக இருந்த பிரான்ஸ் பிரஜை ஒருவரே இவ்வாறு தலைமறைவாகியுள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

அவருக்கு கொரோனா தொற்று உள்ளதா, இல்லையா என்பதை உறுதி செய்யவும், அவரை தனிமைப்படுத்தல் மற்றும் தொற்று நீக்கல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தும் வகையில் பொலிஸார் அவரை தேடி வருவதாகவும் பொலிஸ் சட்டப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

அத்துடன், இந்த வெளிநாட்டவரின் புகைப்படத்தையும் பொலிஸார் வெளியிட்டு பொது மக்களின் உதவியை நாடியுள்ளார்.

அந்த நபரை அடையாளம் கண்டால், அல்லது அவர் தொடர்பாக தகவல் தெரிந்தால் உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறும் அவர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

## முக்கிய கட்சிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் யாழ் மாவட்டத்தில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் தலைமை வேட்பாளர் மாவை சேனாதிராஜா தலைமையில் யாழ் செயலகத்துக்கு வந்திருந்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன் னணி அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலும் –

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி அதன் தலைவர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் தலைமையிலும் –

ஐக்கியதேசியக்கட்சி அதன் தலைமை வேட்பாளர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தலைமையிலும்–

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அதன் தலைமை வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் தலைமையிலும் –

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) அதன் தலைமை வேட்பாளர் சந்திரசேகரன் தலைமையிலும்–

முற்போக்குத் தமிழ்த் தேசியக் கட்சி சுயேச்சைக் குழுவாக அதன் தலைவர் எஸ்.விஜயகாந்த் தலைமையிலும் –

இன்று காலை வேட்பு மனுக்களை தாக்கல் செய்தன.

பொ.ஐங்கரநேசன் தலைமையிலான தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் இன்று பிற்பகலில் வேட்புமனுவை தாக்கல் செய்யும் என எதிர்பார்க்கப்பட்டது. (உ)

## நயினாதீவு படகுச் சேவை மட்டுப்படுத்தத் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

நயினாதீவிற்கான படகு சேவையை மட்டுப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தலை கட்டுப்படுத்தும் முகமாக, மக்களின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவும் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஒரு மணித்தியாலத்துக்கு ஒரு தடவை மாத்திரமே, படகு சேவை முன்னெடுக்கப்படுமென, நயினாதீவு படகு உரிமையாளர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## அக்கராயன்குளம் பகுதியில் நேற்றிரவு குடியிருப்பு வீடு விஷமிகளால் தீக்கிரை

கிளிநொச்சி, மார்ச்.18

கிளிநொச்சி அக்கராயன்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெங்காதரன் குடியிருப்பில் வீடு ஒன்றுக்கு விமிகளால் தீவைக்கப்பட்டுள்ளது.

மிகவும் வறுமை கோட்டிற்கு உட்பட்டு கணவனால் கைவிடப்பட்டு இரண்டு பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகின்ற இக் குடும்பம் நிர்க்கதியான நிலையில் உள்ளது.

குடும்பத்தின் வறுமையை கண்டு தொண்டு நிறுவனங்களால் தற்காலிக வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டது. இவ்வாறாக வழங்கப்பட்ட வீட்டிற்கே நேற்று இரவு தீ வைக்கப்பட்டுள்ளது.

கட்டாக்காலி நாய் கடிக்கு உள்ளான தனது பிள்ளையை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றபோது வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் இரவு 11 மணி அளவில் இந்தத் தீ வைப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டுக்கு வழங்கப்பட்ட மின்சார கட்டணம் செலுத்தப்படாமையினால் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது நிலையில் வீட்டில் மின்சார ஒழுக்கு ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கவில்லை.

இந்நிலையில் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை அக்கராயன்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள்.

## விக்கி அணியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், சிங்கபாகு சிவகுமார் ஆகியோரும், தமிழ்த் தேசியக் கட்சி சார்பில் என்.சிறிகாந்தா, சிவாஜிலிங்கம் ஆகியோரும் –

ஈழத்தமிழர் சுயாட்சிக்கழகம் சார்பில் அனந்தி சசிதரனும் களமிறங்கியுள்ளனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.03.2020 இல் வெளியிடப்பெற்றது.